بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْم    نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 6

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

21 ஜமாதுல் அவ்வல் 1439 ஹிஜ்ரி கமரி    8 தப்லீக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

8 பிப்ரவரி 2018


## அல்லாஹ்வின் கட்டளை

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ

(அதிகாரம் அல்-பக்கரா : 46)

மேலும் பொறுமை, தொழுகை ஆகியவை மூலம் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக பணிவுடையவர்களைத் தவிர (மற்றவர்களுக்கு) இது கடினமானதாகும்.

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். காதுகளைத் திறந்து கேளுங்கள். எனது ஆன்மா அழிந்து போகக்கூடிய ஆன்மா அல்ல. எனது இயல்பில் தோல்விக்கே இடமில்லை. எனக்கு எத்தகைய தைரியமும் உண்மையும் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு எதிரில் மலை ஒன்றுமற்றதாகும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

அறிவற்றவர்களே ! குருடர்களே ! எனக்கு முன்னால் எந்த உண்மையாளர் வீணாகியிருக்கின்றார் ? நான் வீணாகுவதற்கு! எந்த நன்றியுணர்வுள்ள உண்மையாளர்களை இறைவன் இழிவுடன் அழித்திருக்கின்றான் ? என்னை அழிப்பதற்கு! உறுதியாக நினைவில் கொள்ளுங்கள் ! காதுகளை திறந்து கேளுங்கள். எனது ஆன்மா அழிந்து போகக்கூடிய ஆன்மா அல்ல. எனது இயல்பில் தோல்விக்கே இடமில்லை. எனக்கு எத்தகைய தைரியமும் உண்மையும் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு எதிரில் மலை ஒன்றுமற்றதாகும். நான் எவரையும் பொருட்படுத்துவதில்லை. நான் தனியாக இருந்தேன். தனியாக இருப்பதில் நான் வெறுப்படையவில்லை. இறைவன் என்னை கைவிட்டு விடுவானா என்ன ? ஒருபோதும் கை விட்டு விட மாட்டான். என்னை அவன் வீணாக்கி விடுவானா என்ன ? ஒருபோதும் வீணாக்கி விட மாட்டான். எதிரிகள் இழிவடைவர். பொறாமைப்படுபவர்கள் வெட்கப்படுவர். இறைவன் தனது அடியானுக்கு ஒவ்வொரு களத்திலும் வெற்றியை வழங்குவான். நான் அவனுடன் இருக்கின்றேன். அவன் என்னுடன் இருக்கின்றான். எந்த பொருளும் எங்களது உறவை முறித்து விட முடியாது. நான் அவனது கண்ணியம் மற்றும் கம்பீரத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். உலகிலும் மறுமையிலும் அவனது மார்க்கத்தின் மகிமை வெளிப்படுவது, அவனது கம்பீரம் ஒளி வீசுவது, அவனுக்கு வெற்றி கிடைப்பது, ஆகியவற்றை விட அதிகமாக எந்த ஒரு பொருளும் எனக்குப் பிரியமானதல்ல. ஒரு சோதனை அல்ல. கோடிக்கணக்கான சோதனைகள் வந்தாலும் அவனது அருளால் எனக்கு அச்சம் ஏற்படுவதில்லை. சோதனைகளின் களங்களிலும், துக்கங்களின் காடுகளிலும் எனக்கு ஆற்றல் வழங்கப்பட்டிருக்கின்றது.

*(அன்வாருல் இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 9 பக்கம் 23)*

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.**

✦ 44 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ 20,048 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,300 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜுது தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ 32 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ 20 முதல் 22 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான اِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْح جَآءَ الْمَسِيْح MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ 3 முதல் 5 ஜனவரி வரை *"The Messiah of the Age"* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி MTA -வில் ஒளிபரப்பப்பட்டது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

### முதலாவது நாளின் முதலாவது அமர்வு:

துவக்க நிகழ்ச்சிக்குப் பிறகு ஆண்டு மாநாட்டின் முதல் அமர்வு ஆரம்பமானது. இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது கரீமுத்தீன் சாஹிப் ஷாஹிது (சத்ர் கஸா போர்டு, காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் தலைப்பு "இறைவனின் இருப்பு" (இஸ்லாம் ஓர் உயிருள்ள இறைவனைப் பற்றிய கருத்தையே எடுத்துக் கூறுகிறது) என்பதாகும்.

அவர்கள் சூரா அல் பக்காராவின் 256 -வது வசனத்தை அதாவது, ஆயத்துல் குர்ஸியை ஓதிய பிறகு இவ்வாறு கூறினார்கள்: இன்று உலகில் எந்த அளவு மதங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தின் அடித்தளமும் இறைவன் இருக்கின்றான் என்பதில்தான் நிலைத்திருக்கின்றது. காலம் செல்லச் செல்ல மதங்களைச் சார்ந்திருப்பவர்கள் இடத்திலும் அல்லாஹ்வின் இருப்பின் மீதுள்ள ஈமான் ஒரு சடங்காக ஆகி விட்டது. பௌதீகம் மற்றும் தொழில் நுட்பத்தின் விஷமானது இவர்களது இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற கொள்கையை துண்டு துண்டாக ஆக்கி விட்டது. சூரா அல் அன்கபூத்தின் 70 -வது வசனத்திற்கேற்ப எவர் அல்லாஹ்வின் வழியில் முயற்சி செய்வாரோ அவர் மீது உயிருள்ள இறைவனின் உயிருள்ள தோற்றங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள், ஹஸ்ரத்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று இறைவனின் அருளால் காதியானின் ஆண்டு மாநாடு தொடங்கி விட்டது. மாநாட்டின் மூன்று நாட்களும் நன்றாக கழிய இறைவனிடம் துஆ செய்யுங்கள். ஜமாஅத்தின் நல்லுள்ளம் கொண்ட மக்கள் எந்த நோக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக இங்கு கூடியிருக்கிறார்களோ அந்த நோக்கத்தை அடையக் கூடியவர்களாக ஆகட்டுமாக.

ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதன் உயர்வான குறிக்கோள்கள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியவாறு அந்த குறிக்கோள்களை அடைவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஜமாஅத் சகோதரர்களுக்கு முக்கிய அறிவுரைகளைக் கூறினார்கள்.

இன்று உலகிற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் துஆவின் அவசியம் அதிகமாக இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல இடங்களில் பல்வேறு அமர்வுகளில் துஆ பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும் தனது புத்தகங்களிலும் இதைப் பற்றி எழுதியுள்ளார்கள். துஆ என்றால் என்ன? இதற்காக எவ்வாறான நிலையை ஏற்படுத்த வேண்டும். துஆ எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்? மேலும் நான் கூறியது போன்று துஆதான் எல்லாவற்றிற்கும் நிரந்தர தீர்வு என்பதைப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்கள். மேலும் துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள் என்று கூறியுள்ளார்கள்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இது மிக முக்கிய விஷயமாகும். அதாவது, அனைவரும் தமது பகைமை, காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றை உள்ளத்திலிருந்து அகற்றி மேலும் இறைவன் முன்னிலையில் குனிந்தவாறு மன்றாடி தனது பாவத்திற்காக மன்னிப்பை வேண்ட வேண்டும். மேலும் வரக்கூடிய காலங்களில் தம்முடைய உள்ளத்தை தூயதாக வைக்கவும் இறைவனிடம் உதவி தேட வேண்டும்.

துஆவிற்காக நிம்மதியிழந்த நிலை ஏற்படுவது அவசியமாகும். எல்லாவிதமான துயர நிலையிலும் இறைவன்தான் நமக்கு உதவ முடியும். அவன்தான் துஆக்களையும் கேட்கின்றான். மேலும் தன்னுடைய அடியாருக்கு உதவுகின்றான் என்ற நம்பிக்கையில் நிலைத்திருப்பதும் அவசியமாகும்.

துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக மனிதன் ஒவ்வொரு நாளும் நன்மையில் முன்னேற வேண்டும் என்பது அவசியமாகும்.

நம்முடைய துஆக்கள் ஒரு மையத்தை அடையும் போது பொய்யர்கள் தாமாகவே அழிந்து விடுவார்கள். இது புரியத்தக்க கருத்தாகும்.

அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தின் கண்களைத் திறப்பானாக. எதிர்ப்பிலிருந்து விலகி அல்லாஹ் அனுப்பியவரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உதவியாளர்களாக அவர்கள் ஆகட்டுமாக. அல்லாஹ் நம்மையும் துஆவின் உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவானாக. மாநாட்டில் கலந்திருக்கக் கூடியவர்கள் சிறப்பாக துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த மாநாட்டில் கலந்து கொள்வது அவர்களில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமையட்டுமாக. அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **29 டிசம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **29 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

இன்று இறைவனின் அருளால் காதியானின் ஆண்டு மாநாடு தொடங்கி விட்டது. மாநாட்டின் மூன்று நாட்களும் நன்றாக கழிய இறைவனிடம் துஆ செய்யுங்கள். ஜமாஅத்தின் நல்லுள்ளம் கொண்ட மக்கள் எந்த நோக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக இங்கு கூடியிருக்கிறார்களோ அந்த நோக்கத்தை அடையக் கூடியவர்களாக ஆகட்டுமாக. அந்த நோக்கம் என்னவென்றால், இறைவன் முன்னிலையில் மன்றாடுவது, தன்னுடைய அறிவு மற்றும் நன்னடத்தையின் நிலையை சிறந்ததாக ஆக்க முயற்சி செய்வது, இறைவனோடு உள்ள தொடர்பை வலுப்படுத்துவது, இந்த நோக்கத்திற்காக மாநாட்டின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, அதனை கேட்பது, அதிலிருந்து பயன் பெறுவது ஆகியவை ஆகும். மேலும், துஆவின் பக்கம் தனிப்பட்ட ஈர்ப்புடன் கவனம் செலுத்த வேண்டும். தனக்காக மட்டும் துஆ செய்யாமல், ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும் முக்கியமாக துஆ செய்ய வேண்டும். ஜமாஅத்தின் எதிரிகளுக்காக அதாவது ஜமாஅத்திற்கு நஷ்டம் விளைவிக்க வேண்டும் என உலகின் எந்தப் பகுதியிலிருந்து எதிரிகள் திட்டம் தீட்டினாலும் அதனை தவிடு பொடியாக்க இறைவனின் சிறப்பான உதவியையும், அருளையும் பெற துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நம் அனைவரையும் அவர்களின் அனைத்து விதமான தீங்கிலிருந்து பாதுகாப்பானாக.

இவ்வாறு முஸ்லிம்களின் பொதுவான நிலை மற்றும் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் பெயரில் சில அமைப்புகள் மற்றும் அரசாங்கங்கள் செய்கின்ற கொடுமையை நாம் பார்க்கின்றோம். முஸ்லிம்கள் முஸ்லிம்களின் கழுத்தை அறுக்கின்றனர். அவர்கள் கொல்லப்படு -கிறார்கள். இவ்வாறு அவர்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்காகவும் துஆ செய்வது இன்று நம் மீது கடமையாகும். ஏனென்றால் இந்த அமைப்புகள் மூலமாக அல்லாஹ் மற்றும் நமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரில் இந்த அநீதிகள் இழைக்கப்படுகின்றன. இந்த அநீதிகளின் காரணமாகத்தான் மாற்று மத உலகில் இஸ்லாம் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஆட்சேபனை செய்யப்படுகின்றன.

ஆக, இந்த காரியங்களால் அஹ்மதிகளாகிய நமது உள்ளங்கள்தான் புண்படுகின்றன. ஆகவே இதற்காகவும் நாம் துஆ செய்ய வேண்டும். மேலும் இன்றைய தினம் எவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஊரில் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மைப் பேரன்பரின் ஊரில் ஒன்று கூடியுள்ளார்களோ அவர்கள் சிறப்பாக தனியாகவும் ஜமாஅத்தாகவும் தங்களது துஆக்களில் இவ்வனைத்து நோக்கங்களையும் இவ்வனைத்து துஆக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டார்களோ அதற்காகவும் துஆ செய்ய வேண்டும். அந்த நோக்கம் என்னவென்றால், முஸ்லிம்களை நேர்வழிப்படுத்துதல், மாற்று மதத்தவரின் மீது இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துதல் மற்றும் அவர்களின் மீது இஸ்லாத்தின் மேன்மையை நிரூபித்துக் காட்டி, அவர்களை இஸ்லாத்தின் மடியில் விழ வைத்தல்

மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் அவர்களைக் கொண்டு வருவதும் ஏகத்துவத்தில் நிலைத்திருக்கச் செய்வதும் ஆகும். இவ்வாறு பொதுவாக உலகின் நிலைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அனைத்து மக்களுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் அழிவின் கிடங்கில் விழுவதிலிருந்து பாதுகாக்கப்படுவார்களாக.

இன்று உலகிற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் துஆவின் அவசியம் அதிகமாக இருக்கின்றது. ஆகவே மாநாட்டில் கலந்து கொண்டிருக்கக்கூடிய காதியானில் உள்ளவர்களிடம் சிறப்பாகவும் முழு உலக ஜமாஅத்திடம் பொதுவாகவும் துஆ செய்யுங்கள் என நான் கூறுவேன். அதாவது அல்லாஹ் உலகிற்கு அறிவை வழங்குவானாக. முஸ்லிம் சமுதாயத்திற்கும் அறிவை வழங்குவானாக. இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொள்ளாத வரை இவர்களுக்கு நிலைநிற்பும் கிடையாது மற்றும் இரட்சிப்பும் கிடையாது என்ற இந்த உண்மையை புரிபவர்களாக அவர்கள் ஆகட்டுமாக. புது வருடத்தில் இவர்கள் அடியெடுத்து வைக்கும் போது இதைப் புரிபவர்களாக ஆகட்டுமாக.

எவ்வாறிருப்பினும், துஆவின் தலைப்பு எப்படிப்பட்ட தலைப்பு என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல இடங்களில் பல்வேறு அமர்வுகளில் துஆ பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும் தனது புத்தகங்களிலும் இதைப் பற்றி எழுதியுள்ளார்கள். துஆ என்றால் என்ன? இதற்காக எவ்வாறான நிலையை ஏற்படுத்த வேண்டும். துஆ எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்? மேலும் நான் கூறியது போன்று துஆதான் எல்லாவற்றிற்கும் நிரந்தர தீர்வு என்பதைப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்கள். மேலும் துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள் என்று கூறியுள்ளார்கள். இதன் அடிப்படையில் அன்னாரது சில மேற்கோள்களை நான் எடுத்துரைப்பேன்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குத் தேவையான அடிப்படை கொள்கையினை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உள்ளம் எதுவரை தூய்மையாக இருக்காதோ அதுவரை துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மேலும் ஏதாவதொரு உலக விஷயத்தில் ஒரு நபருக்காக கூட உங்களின் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருந்தால் உங்களது துஆ ஏற்றுக் கொள்ளப்படாது. பௌதீக விஷயத்திற்காக எவருடனும் பகைமையும் காழ்ப்புணர்ச்சியும் கொள்ளக் கூடாது. உலகம் மற்றும் அதன் காரணிகளுக்கு என்ன அந்தஸ்து இருக்கின்றது? அதன் காரணமாக நீங்கள் ஒருவருடன் பகைமை மேற்கொள்கின்றீர்கள் என்ற இந்த விஷயத்தை மிகத் தெளிவாக கருத்தில் கொள்ள வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 217-218; 1985 ஆம் ஆண்டு பதிப்பு-இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆகவே, துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இது மிக முக்கிய விஷயமாகும். அதாவது, அனைவரும் தமது பகைமை, காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றை உள்ளத்திலிருந்து அகற்றி இறைவன் முன்னிலையில் குனிந்தவாறு மன்றாடி தனது பாவத்திற்காக மன்னிப்பை வேண்ட வேண்டும். மேலும் வரக்கூடிய காலங்களில் தம்முடைய உள்ளத்தை தூயதாக வைக்கவும் இறைவனிடம் உதவி தேட வேண்டும். இன்று அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அஹ்மதிய்யத்திற்கு எதிராக தமது எதிர்நடவடிக்கைகளில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள். நான் ஒன்றாகக் கூடி இறைவனின் முன்னிலையில் நமது துஆக்களோடு ஆஜராகி விட வேண்டும். துடிப்புடன் உருக்கத்துடன் மனிதனின் தலை அல்லாஹ்வின் முன்பு குனியும்போது, அவன் அவனிடம் கேட்கும்போது அல்லாஹ்வும் அவனது உதவிக்காக வருகின்றான். ஆக, இந்தக் கோட்பாட்டினை எந்நேரமும் கருத்தில் கொள்ள வேண்டும். எந்நேரமும் இதிலிருந்து பொறுப்பற்றவராக இருந்து விடக் கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சிலர் ஒரு காதில் கேட்டு விட்டு இன்னொரு காதின் வழியாக விட்டு விடுகின்றார்கள். இந்த விஷயங்களை உள்ளத்தில் பதிவதில்லை. எவ்வளவு அறிவுரை கூறினாலும் அவர்களின் மீது எந்த தாக்கமும் ஏற்படுவதில்லை. ஆகவே நினைவில் கொள்ளுங்கள். இறைவன் தன்னிறைவு பெற்றவன் ஆவான். அதிகமாகவும் மீண்டும் மீண்டும் உருக்கமாக துஆ செய்யப்படாத வரை அவன் பொருட்படுத்துவதில்லை. ஆகவே ஒருவரின் மனைவி மக்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் அல்லது ஒருவருக்கு மிகப்பெரிய துயரம் ஏற்பட்டிருந்தால் அதற்காக எந்த உருக்க நிலையும் ஏற்படவில்லை என்றால் அது தாக்கமற்ற வீணான செயலாக இருக்கும். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக ஆரம்பத்திலேயே அன்னார் கூறி விட்டார்கள். துஆவில் உருக்கம் ஏற்படுத்தும் நிலை இருக்க வேண்டும். தங்களது உள்ளங்களின் காணப்படும் அசுத்தங்களை தூய்மைப்படுத்த வேண்டும். துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நிம்மதியிழந்த நிலை இருப்பது ஒரு நிபந்தனை ஆகும். ஒரு நிபந்ததனை உள்ளத்தை தூய்மைப்படுத்துவதாகும். மற்றொன்று நிம்மதியிழந்த நிலை ஆகும்.

எனவே, இறைவன் கூறுகின்றான்: أَمَّنْ يُجِيبُ الْمُضْطَرَّ إِذَا دَعَاهُ وَيَكْشِفُ السُّوءَ அல்லது துன்பத்திற்கு ஆளானவர், அவனிடம் பிரார்த்தனை செய்யும் போது அவரு(டைய வேண்டுதலு)க்குப் பதிலளித்து (அவரது) தீங்கை அகற்றி (வேண்டுதல் புரியும்) உங்களை இப்பூமி முழுவதற்கும் வாரிசுகளாக்குபவன் எவன்? **(27:63)** (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 137; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

துஆவிற்காக நிம்மதியிழந்த நிலை ஏற்படுவது அவசியமாகும். எல்லாவிதமான துயர நிலையிலும் இறைவன்தான் நமக்கு உதவ முடியும். அவன்தான் துஆக்களையும் கேட்கின்றான். மேலும் தன்னுடைய அடியாருக்கு உதவுகின்றான் என்ற நம்பிக்கையில் நிலைத்திருப்பதும் அவசியமாகும். எனவே இன்று அந்த அஹ்மதிகள் அதாவது நான் காதியானின் இருக்கக் கூடியவர்களை நோக்கிக் கூறுகின்றேன். நீங்கள் ஒரு சிறப்பான ஆன்மீக சூழலில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஊரில் இருக்கின்றீர்கள் அல்லது வெளியிலிருந்து வந்து சில நாட்களைக் கழிக்கின்றீர்கள். நீங்கள் உங்களது தொழுகைகளிலும் நஃபில்களிலும் உருக்க நிலையை உருவாக்க வேண்டும். பொதுவாக முழு ஜமாஅத்திற்கும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அங்குள்ளவர்கள் வீணான விஷயங்களைப் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து, அதிக நேரம் துஆ மற்றும் இறைவனை நினைவு கூர்வதில் கழிக்க வேண்டும். தவிப்புடன் இறைவன் முன்னிலையில் குனிய வேண்டும். ஆக, அவ்வாறு எங்கெல்லாம் அஹ்மதிகளுக்கு துயர நிலை ஏற்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அல்லாஹ் தனது அருளால் நிலைமையை சீராக்குவானாக. மேலும் எதிரிகளை அவன் தோற்கடிப்பானாக.

நிம்மதியிழந்த நிலை மற்றும் துஆவின் உண்மைத்துவம் பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: துஆ என்பது எந்த விளைவையும் ஏற்படுத்தாத, வாயால் உச்சரிக்கப்படும் சில சொற்கள் என்று நீங்கள் கருதி விடக் கூடாது. மாறாக, துஆ ஒரு வகையான மரணமாகும். அதற்குப் பிறகு புதிய வாழ்வு கிடைக்கிறது. மேலும் பஞ்சாபியில் ஒரு கவிதை உள்ளது. ''ஜோமன்கோ ஸோமர் ரஹே, மரே ஸோ மன்கன் ஜா'' அதவாது யாசிப்பவருடைய நிலை எவ்வாறு என்றால் அது மரணித்திற்கு சமம். தன்னுடையது ஒன்றுமே இருக்காது. தன்னுடைய அந்தஸ்து, அகந்தை ஆகிய அனைத்தையும் அது அழித்து விடுகின்றது. மேலும் முழுவதுமாக தன்னை மாய்த்து விட்ட பின்னர்தான் அவர் யாசிக்கின்றார். இவ்வாறான நிலையில் மனிதன் இறைவன் முன் நிற்கும்போது துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: துஆவில் ஒரு காந்தத்தின் தாக்கம் இருக்கின்றது. அது அருளையும் கருணையையும் தன் பக்கம் ஈர்க்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 82; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பின்னர் துஆவின் முக்கியத்துவம், துஆ மற்றும் நஃபில்களின் பக்கம் கவனம் மற்றும் இறைவனின் அருளை பெறுவதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: நாம் இதை கூறுகின்றோம். அதாவது, எவர் இறைவன் முன்நிலையில் பணிவையையும் உருக்கத்தையும் மேற்கொள்கின்றாரோ மற்றும் எவர் அவனது இறை வரையறை மற்றும் கட்டளைகளை கண்ணியத்தோடு பார்ப்பாரோ, (இறை வரையறை மற்றும் கட்டளைகளை கண்ணித்தோடு பார்ப்பதும் மிக முக்கியமாகும். அது எந்த வரையறை என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.) மேலும் அதனைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் எடுத்துக் கூறினார்கள். அச்சம் கொண்டு சீர்திருத்தத்தை மேற்கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு கட்டுப்படாமை எனக்கு தண்டனை அளிக்கக் கூடியதாகும் என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும். ஆகவே இவ்வனைத்து விஷயங்களையும் கண் முன் நிறுத்தி செயல்பட வேண்டும்.

மேலும் கூறுகின்றார்கள்: அவர் இறை அருளை நிச்சயமாக பெறக் கூடியவராக இருப்பார். ஆகவே நம்முடைய ஜமாஅத்தை சார்ந்தவர் தங்கள் மீது தஹஜ்ஜுத் தொழுகையை கடமையாக்கி கொள்ள வேண்டும். முழுவதுமாக தொழ முடியாது என்றால் குறைந்தபட்சம் இரண்டு ரக்அத்துகளாவது தொழ வேண்டும். ஏனென்றால் கண்டிப்பாக அவருக்கு துஆ செய்வதற்கான வாய்ப்பு கிடைத்து விடுகின்றது. அந்த நேரத்தில் செய்யப்படுகின்ற துஆவில் தனி தாக்கம் உள்ளது. அதாவது தஹஜ்ஜுத் நேர துஆவில் தனி தாக்கம் உள்ளது. எதுவரை வலி, வேதனை உள்ளத்தில் இல்லையோ அதுவரை அவர் நிம்மதியான தூக்கத்திலிருந்து எவ்வாறு எழுந்திருக்க முடியும். ஆகவே அந்நேரம் விழிப்பதே உள்ளத்தில் வலியை ஏற்படுத்தி விடுகின்றது. இந்த உருக்கம் மற்றும் துடிப்பு துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. தஹஜ்ஜுத் தொழுகையில், நஃபில்களில் உருக்கமும் துடிப்பும் ஏற்படுகின்றபோது, துயரமுற்றவரின் துஆவை ஏற்றுக் கொள்வேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். உருக்க நிலையும் துடிப்பும் தன்னுடைய சுகத்தை தியாகம் செய்து இறைவணக்கத்திற்காக எழும்போதுதான் ஏற்படுகின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: எழுவதற்கு சோம்பேறித்தனம் காட்டுபவன் உள்ளத்தில் வலியும், வேதனையும் இல்லை என தெளிவாகின்றது. ஏனென்றால் தூக்கம் அந்த ஏக்கத்தினை போக்கி விடுகின்றது. எப்போது தூக்கத்திலிருந்து எழுவாரோ, அப்போது தூக்கத்தை விட பெரிய துக்கம் அவனுக்கு இருக்கின்றது. அது அவனை தூக்கத்திலிருந்து எழுப்புகின்றது என்பது தெளிவாகும். நம்முடைய ஜமாஅத் கடைபிடிக்க வேண்டிய அவசியமான இன்னொரு விஷயமும் இருக்கின்றது. அதாவது நாவினை வீணான பேச்சுகளை விட்டும் விலக்கி வைக்க வேண்டும். எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தாதீர்கள். எந்த விதமான தவறான விஷயத்தையும் கூறாதீர்கள். மாநாட்டின் சூழலில் இதனை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். அதிக நேரம் இறை தியானத்தில் கழிக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நாவு மனிதனின் நுழைவாயிலாகும். நாவினை தூய்மைப்படுத்தும் போது இறைவன் மனிதனின் நுழைவாயிலில் வந்து விடுகின்றான். வீட்டினுடைய முக்கிய நுழைவு வாயில் போன்றது நாவு. இறைவன் நுழைவாயிலில் வந்து விடுவான் என்றால் உள்ளே வர அவனுக்கு எவ்வளவு நேரமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனின் உரிமையை செலுத்துவதிலும் படைப்பினங்களின் உரிமையை செலுத்துவதிலும் அறிந்தே ஒருபோதும் கவனக்குறைவு ஏற்படக் கூடாது. இறைவனின் உரிமையை செலுத்திவதிலும் சரி, படைப்பினங்களின் உரிமையை செலுத்துவதிலும் சரியே கவனக் குறைவு ஏற்படக் கூடாது. எவர் இவ்விரண்டு விஷயங்களையும் கருத்தில் கொண்டு துஆ செய்வாரோ அல்லது இவ்வாறும் கூறலாம்: எதனை கொண்டு துஆவிற்கான வாய்ப்பு கொடுக்கப்படுமோ நிச்சயமாக அல்லாஹ் அவர் மீது தன்னுடைய அருளை பொழிவான். மேலும் அவன் காப்பாற்றப்பட்டு விடுவான் என்று அன்னார் கூறுகின்றார்கள். வெளிப்படையான திட்டங்களுக்கு தடையில்லை. மாறாக நம்பிக்கை வைப்பதற்கு முன்பாக ஒட்டகத்தை கட்டி வைப்பது அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இதை செயல் –படுத்த வேண்டும். உதாரணமாக, இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தயீன் மூலம்தான் அது தெளிவாகிறது. ஆனால் உண்மையான தூய்மை என்னவென்றால் قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰهَا என்பதற்கேற்ப ஒவ்வொருவரும் தன்னுடைய நஃப்ஸை சீர்த்திருத்துவதை தனது கடமையாக கருத வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: எவர் தொடர்ந்து துஆ, தொடர் பாவமனிப்பு மற்றும் தெரிந்தே தீமை செய்தலில் இருந்து விலகி இருப்பாரோ அவரே இறைவனின் அருள்களைப் பெறக் கூடியவராக இருக்க முடியும்.

அன்னார் கூறினார்கள்: பாவம் ஒரு கொடிய விஷம் ஆகும். அது மனிதனைஅழித்து விடுகின்றது. இறைவனின் கோபத்தை தூண்டுகிறது. பாவமும் வரம்பு மீறுதலும் இறைவனின் அச்சம் மற்றும் அன்பை விலக்கி விடுகிறது. இறைவனுடைய அச்சம் மற்றம் அன்பு இருந்தாலும் எண்ணம் இருக்கும்போதுதான் தீமைகளிலிருந்து தப்பிக்க முடியும்.

அன்னார் கூறினார்கள்: "துஆவின் தொடர்பை முறித்து விடாதீர்கள். தவ்பா மற்றும் பாவமன்னிப்பை மேற்கொள்ளுங்கள். இறைவன் முன்னிலையில் உள்ளம் கரைந்தோட வேண்டும். இறைவனை தவிர வேறு அடைக்கலம் இல்லை என்ற இந்த துஆதான் பயனளிக்கக் கூடியதாக அமையும். (எவர் இறைவன் பக்கம் ஓடுகின்றாரோ (எவர்) உருக்கத்துடன் அமைதியான வழியைத் தேடுகின்றாரோ அவர் இறுதியில் காப்பாற்றப்பட்டு விடுகின்றார்." (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 245-247; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

உண்மையான துஆ என்ன என்பதை கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: துஆ இரண்டு வகைப்படும். ஒன்று, சாதாரண முறையில் அதாவது பொதுவாக மனிதன் செய்யக் கூடியது. இரண்டாவது, மனிதன் அதனை அதன் எல்லை வரை எட்ட வைப்பது. இந்த துஆவே உண்மையான முறையில் துஆ என்று அழைக்கப்படுகின்றது. மனிதன் துஆவை அதன் எல்லை வரை எட்ட வைக்க வேண்டும். மேலும் அதில் உருக்க நிலை ஏற்பட வேண்டும். மேலும் மனிதன், தான் எந்த கஷ்டத்தில் விழாமல் இருக்கும்போதும் துஆ செய்ய வேண்டும். கஷ்டம் வரும்போதுதான் துஆ செய்ய வேண்டும என்று இருக்கக் கூடாது. ஏனென்றால் இறைவனின் நாட்டம் என்ன? நாளை என்ன நடக்கப் போகிறது என்று அவனுக்கு என்ன தெரியும்? ஆகவே தொடக்கத்திலிருந்தே துஆ செய்ய வேண்டும். இவ்வாறு அவன் காப்பாற்றப்படுவான்.

அன்னார் கூறினார்கள்: "சில வேளை மனிதனுக்கு கஷ்டம் துஆவிற்கான வாய்ப்பு கிடைப்பதற்கு முன்பாகவே வந்து விடுகின்றது. ஆகவே முன்னரே துஆ செய்திருக்கும் போது அந்த கஷ்ட காலத்தில் அது உதவும்." (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 62; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) திருக்குர்ஆன் துஆவில் தான் ஆரம்பிக்கின்றது; துஆவில்தான் முடிகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: "இறைவன் திருக்குர்ஆனை துஆவில் ஆரம்பித்து அதனை துஆவில்தான் முடிக்கவும் செய்திருக்கின்றான். (சூரா ஃபாத்திஹாவும் துஆ தான்; சூரா அந்நாஸும் துஆ தான் என்பதே இதன் பொருளாகும்.) எதுவரை இறைவனிடம் இருந்து உதவி கிடைக்காதோ அது வரை மனிதன் நன்மையில் முன்னேறிச் செல்லவே முடியாது. ஒரு ஹதீஸில் வந்துள்ளது: இறைவன் எவருக்கு உயிர் கொடுப்பானோ அவரை தவிர அனைவருமே மரணித்தவர்களாவர். இறைவன் எவருக்கு நேர்வழியினை கொடுப்பானோ அவரை தவிர அனைவருமே வழிகெட்டவர்களாவர். இறைவன் எவருக்கு பார்வை அளிப்பானோ அவரைத் தவிர அனைவருமே குருடர்களாவர்."

ஆக, இறைவனின் அருள் கிடைக்காத வரை உலக நேசத்தின் சங்கிலியானது கழுத்தின் மாலையாக இருக்கும். இறைவன் எவர் மீது அருள் புரிவானோ அவரே இதிலிருந்து விடுதலை பெறுகின்றார். ஆனால் நினைவில் கொள்ள வேண்டும். இறைவனது அருளும் துஆவின் மூலமாகவே ஆரம்பமாகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 62;

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) துஆ மட்டுமே செய்ய வேண்டியதிருக்கும்.

பின்னர் நம்பிக்கையாளர்களின் நற்பண்புகளை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ هُمْ فِيْ صَلٰوتِهِمْ خَاشِعُوْنَ என்று கூறுகின்றது. துஆ செய்தவாறு மனிதனின் உள்ளம் கரையும் போது இறைவன் முன்னிலையில் எல்லாவித சிந்தனைகளையும் களைந்து விட்டு, அதிலேயே மூழ்கி விட்டு, அனைத்து எண்ணங்களையும் அழித்து விட்டு அவனிடமே அருளையும் உதவியையும் நாடி மனதை ஒருநிலைப்படுத்துவது ஏற்பட்டு அதனால் உருக்கமும் மன்றாடலும் ஏற்படும்போது வெற்றிக்கான வாசல் திறந்து விடுகின்றது. அதாவது மன்றாடும் நிலை ஏற்பட வேண்டும். உருக்க நிலை ஏற்பட வேண்டும். உள்ளத்தில் மென்மை ஏற்பட வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போதுதான் வெற்றிக்கான வாசல் திறக்கப்படுகின்றது. நம்பிக்கையாளர் வெற்றி பெற்று விடுவார்கள் என்று வந்துள்ளது. அதாவது எவர் தன்னுடைய தொழுகையில் இறையச்சத்தை மேற்கொள்–வார்களோ அவர்கள் இறைவன் மீது பணிவுடன் குனிகின்றனர்; அவர்கள் மீது உருக்க நிலையும் ஏற்பட்டு விடுகின்றது. அப்போது அவர்களின் மீது வெற்றிக்கான வாசல் திறக்கப்படுகின்றது. அதன் மூலமாக உலக நேசம் குறைந்து விடுகின்றது. ஏனென்றால் இரண்டு நேசமும் ஓரிடத்தில் ஒன்றுசேர முடியாது. உதாரணமாக, ஒரு ஃபார்ஸி கவிதையில் ہم خدا خواہی و ہم دنیائے دُوں ایں خیال است و محال است و جنوں நீ இறைவனையும் நேசிக்கின்றாய். உலகையும் நேசிக்கின்றாய். ஆனால் இறைவனை நேசித்தால் உலகமும் கண்டிப்பாக கிடைத்து விடுகின்றது. உலகத்தை மட்டும் நேசிப்பதால் இறைவன் கிடைக்க மாட்டான். இறைவனின் திருப்தியின் கீழ் தமது நாட்டங்களை விருப்பங்களைக் கொண்டு வரும்போதுதான் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படு–கின்றன என்று கூறப்பட்டுள்ளது. (மல்∴பூஸாத் தொகுதி 10 பக்கம் 63; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இந்த நுணுக்கத்தை எடுத்துரைத்தவாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஃபனாஃபில்லாஹ் இறைவனில் தன்னை மாய்த்து விடுதல், தமது எல்லா நாட்டங்களையும் விட்டு விட்டு இறை நாட்டங்கள் மற்றும் கட்டளைகளின்படி நடப்பவர்களாக ஆகி விட்டு, தங்களுக்காகவும், தங்களது சந்ததியினருக்காகவும் மனைவி மக்கள் உற்றார் உறவினர் மற்றும் நமக்காகவும் கருணைக்கான காரணியாக அமைந்து விடுங்கள். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனக்காகவும் கருணைக்கான காரணியாகி விடுங்கள் என்று கூறுகின்றார்கள். எல்லா வித இச்சைகளையும் விட்டு இறைவன் பக்கம் வரும்போதுதான் அவ்வாறு ஆக முடியும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எதிரிகள் ஆட்சேபனை செய்யும் வகையிலான எவ்வித வாய்ப்பையும் வழங்கக் கூடாது. அல்லாஹ் கூறுகின்றான்:

مِنْهُمْ ظَالِمٌ لِّنَفْسِهٖ وَمِنْهُمْ مُّقْتَصِدٌ وَمِنْهُمْ سَابِقٌ بِالْخَيْرٰتِ

அவர்களுள் சிலர் தமக்கே அநீதியிழைப்பவர்–களாகவும் மற்றுஞ்சிலர் நடுநிலையாளர்களாகவும் இன்னும் சிலர் (நன்மைகளில்) முந்துபவர்களாக–வும் உள்ளனர். (35:33) முதல் இரண்டு பண்புகள் சாதாரணமானவையாகும். சாபிக் பில் ஹைராத் நன்மைகளில் முன்னேறக் கூடியவர்களாக ஆக வேண்டும். ஒரே இடத்தில் நின்று கொண்டிருப்பது சிறந்த பண்பாகாது. நின்று கொண்டிருக்கின்ற தண்ணீர் இறுதியில் அசுத்தமாகி விடுகின்றது. அது சகதியோடு இருப்பதால் துர்நாற்றம் வீசக்கூடியதாகவும், சுவையற்றதாகவும் ஆகி விடுகின்றது. ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீர் எப்போதும் சுத்தமாகவும் சிறந்ததாகவும் சுவையானதாகவும் இருக்கும். ஆயினும் அதற்குக் கீழ் சகதி இருந்தாலும் அது அதனை ஒன்றும் செய்ய முடியாது. அதே நிலைதான் மனிதனுடையதாகும். ஓரிடத்தில் நின்று விடக் கூடாது. இந்த நிலை மிகவும் அபாயகரமானதாகும். எந்நேரமும் அடியை முன்னெடுத்து வைக்க வேண்டும். நன்மையில் முன்னேற வேண்டும். இல்லையென்றால் இறைவன் மனிதனுக்கு உதவி செய்ய மாட்டான். இவ்வாறு மனிதன் ஒளியற்றவனாக ஆகி விடுவான். சிலவேளை இதன் விளைவு முர்தத் ஆக அதாவது மார்க்கத்தை விட்டு விட்டுச் சென்று விடுவதாக முடிந்து விடும். இவ்வாறு மனிதன் அகப்பார்வையற்றவனாக ஆகி விடுவான். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக மனிதன் ஒவ்வொரு நாளும் நன்மையில் முன்னேற வேண்டும் என்பது அவசியமாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஓரிடத்தில் நின்று விடக் கூடாது. ஓடும் தண்ணீரைப் போன்று நிரந்தரமாக மனிதன் ஒவ்வொரு நாளும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நன்மையில் முன்னேறக் கூடியவர்கள் ஓரிடத்தில் நின்று விடாமல் இருப்பார்கள். இவர்களின் நிலை நன்மையில் முடிகிறது. இவர்களுடன் இறைவனுடைய உதவியும் இருக்கின்றது. சிலரை நாம் பார்த்துள்ளோம். அவர்கள் பணிவுடனும், பற்றுடனும், உருக்கத்துடனும் தொழுவார்கள். ஆனால் கொஞ்ச முன்னே சென்று பிறகு நின்று விடுவார்கள். அவர்களது முடிவு நன்மையில் இருப்பதில்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் திருக்குர்ஆனில் இந்த துஆவை கற்றுக் கொடுத்துள்ளான். اَصْلِحْ لِيْ فِيْ ذُرِّيَّتِيْ – எனது மனைவி மக்களையும் நீ சீர்திருத்துவாயாக. (46:16) தனது தூய மாற்றத்திற்காகவும், தமது மனைவி மக்களின் தூய மாற்றத்திற்காகவும் துஆ செய்ய வேண்டும். ஏனென்றால் அதிகமான குழப்பங்கள் சந்ததிகளாலும் பிள்ளைகளாலும் மனிதன் மீது வந்து விழுகின்றன. முதல் குழப்பம் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் மீதும் பெண்ணின் காரணமாக வந்தது. மூஸா (அலை) அவர்களுக்கு எதிரான ஈமானின் காரணமாக பல்ஆமின் மனைவிக்கு அரசர் சில ஆபரணங்களைக் கொடுத்து ஆசை காட்டி மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக தீய துஆ செய்வதற்காக அந்தப் பெண் பல்ஆமை தூண்டி விட்டார் என்று தவ்ராத்திலிருந்து தெரிய வருகின்றது. ஆக, இவர்களின் காரணமாகவும் அதாவது மனைவி மற்றும் மக்களின் காரணமாகவும் மனிதன் மீது துன்பங்களும், கடினங்களும் வந்து விடுகின்றன.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களின் சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்காகவும் துஆவும் செய்து கொண்டிருக்க வேண்டும். (மல்∴பூஸாத் தொகுதி 10 பக்கம் 138-139; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) ஆகவே துஆவின் பக்கம் கவனம் மற்றும் நன்மையில் முன்னேறுதல் ஆகியவை ஒரு முஃமினுக்கு தன்னளவில் மட்டுமே இருக்கக் கூடாது. அடுத்து சந்ததியினரையும் நன்மை செய்ய வைப்பதற்காக முயற்சி செய்யும் அதே நேரத்தில் அவர்களுக்காக துஆவும் செய்ய வேண்டும். இவ்வாறு அவர்களிலும் நன்மையில் முன்னேறும் ஆன்மா பிறக்கட்டுமாக.

ஓரிடத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்: இறை நேசர் ஒருவரது சம்பவம் இவ்வாறு வருகின்றது: அவர் ஒரு கப்பலில் பயணம் செய்கிறார். கடலில் புயல் வந்து, கப்பல் மூழ்கும் நிலைக்குச் சென்று விட்டது. அந்த நபரின் துஆவால் அது காப்பாற்றப்பட்டது. அதாவது அந்த நல்லடியாரின் காரணமாக அது காப்பாற்றப்பட்டது. துஆ செய்யும் போது அந்த நல்லடியாருக்கு உங்களுக்காக நாம் அனைவரையும் காப்பாற்றி விட்டோம் என இல்ஹாமும் இறங்கியது. இவ்வனைத்து விஷயங்களையும் வாயில் கூறுவதால் மட்டும் நாம் பெற முடியாது. அதற்காக கடினமான உழைப்பு தேவைப்படுகிறது.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS
All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

அவர்கள் கூறுகின்றார்கள்: நம்முடைய தரப்பிலிருந்து அறிவுரை என்னவென்றால் நீங்கள் உங்களை சிறந்தவராகவும், நல்ல முன்மாதிரியைக் காட்டக் கூடியவராகவும் ஆக்க முயற்சி மேற்கொள்ளுங்கள். வானவர்களைப் போன்ற வாழ்வு அமையாத வரை ஒருவர் தூயவராக ஆகி விட்டார் என்று நம்மால் எவ்வாறு கூற முடியும்? يَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ. அதாவது, என்ன கட்டளை இடப்படுகின்றதோ அதனையே அவர்கள் செய்வார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 138; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) நம்முடைய செயல் நிலையை நாம் பிறருக்கு கூறும் அளவுக்கு ஆக்க வேண்டும்.

துஆவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு அவர்கள் கூறுகின்றார்கள்: ஓய்வில்லாமல் துஆ செய்கின்ற அந்த கைதி அருளுக்குரியவர் ஆவார். ஏனென்றால், அவர் ஒருநாள் விடுதலை பெறுவார். துஆவில் சேம்பேறித்தனம் காட்டாத அந்த குருடர் அருளுக்குரியவர்; ஏனென்றால் ஒருநாள் அவர்கள் பார்க்கத் தொடங்குவார். துஆவுடன் இறை உதவியை நாடுகின்ற கபரில் கிடக்கக் கூடியவர்கள் அருளுக்குரியவர்கள்; ஏனென்றால் ஒருநாள் அவர்கள் கபரிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

பிறகு அவர்கள் நமக்கு கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்: துஆ செய்வதில் ஒருபோதும் சோர்வடையாத நீங்களும் அருளுக்குரியவர்கள்; ஏனென்றால் உங்களுடைய உள்ளம் துஆவிற்காக கரைகின்றது. உங்களுடைய கண்கள் கண்ணீர் வடிக்கின்றன. உங்களுடைய உள்ளங்களில் அது ஒரு நெருப்பை மூட்டி விடுகின்றது. தனிமையின் இனிமையைக் காட்ட வேண்டி உங்களை அது இருண்ட வீடுகளின் பக்கம் அமைதியின் காடுகளின் பக்கம் கொண்டு சென்று விடுகின்றது. உங்களை தவிப்பவனாகவும், பித்தனாகவும் சுய நினைவில்லாதவனாகவும் ஆக்கி விடுகின்றது. இறுதியில் உங்கள் மீது கருணை காட்டப்படும். இந்த நிலை மாறாமல் இருக்காது. துஆவினால் இறைவனது அருள் வந்து விடும் – இன்ஷா அல்லாஹ். எவன் பக்கம் நாம் அழைக்கின்றோமோ அவன் மிகவும் மேன்மை வாய்ந்தவன், கருணையாளன், வெட்கமுடையவன், உண்மையாளன், பற்றுள்ளவன், எளிமையை மேற்கொள்பவரிடம் கருணை காட்டுபவன் ஆவான். ஆகவே நீங்களும் பற்றுறுதி கொண்டவராகவும் ஆகி விடுங்கள். முழு உண்மை மற்றும் பணிவுடன் துஆ செய்யுங்கள். அப்போது அவன் உங்கள் மீது கருணை காட்டுவான். உலகின் கூச்சல் குழப்பங்களிலிருந்தும் விலகி இருங்கள். தமது சண்டை சச்சரவுகளைக் கொண்டு மார்க்கத்தை அசுத்தப்படுத்தாதீர்கள். இறைவனுக்காக தோல்வியை ஏற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் பெரிய பெரிய வெற்றிகளுக்கு வாரிசாவீர்களாக. துஆ செய்பவர்களுக்கு இறைவன் அற்புதங்களைக் காட்டுகின்றான். யாசிப்பவர்களுக்கு மனித சக்திக்கு அப்பாற்பட்ட அருள் வழங்கப்படும். துஆ இறைவன் புறமிருந்து வருகிறது. இறைவன் புறமே திரும்பியும் செல்கிறது. உங்கள் உயிர் எவ்வாறு உங்களுக்கு அருகில் இருக்கின்றதோ அவ்வாறு துஆவால் இறைவன் உங்களுக்கு அருகில் வந்து விடுகின்றான். மனிதனில் தூய மாற்றம் ஏற்படுவது, துஆவின் முதல் அருளாகும். அந்த மாற்றத்தால் இறைவனும் தனது பண்புகளில் மாற்றத்தைக் கொண்டு வருகின்றான். ஆனால் அவனது பண்புகள் மாற்றமற்றவையாகும். மேலும் தன்னுள் மாற்றத்தைக் கொண்டு வரக் கூடியவருக்காக அது தனிப்பட்ட முறையில் வெளிப்படுகின்றது. இறைவனது பண்புகளில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. மாறாக மனிதன் தன்னுள் மாற்றத்தை ஏற்படுத்தும்போது அதன் வெளிப்பாட்டிலும் மாற்றம் ஏற்படுகிறது. அதனை உலகம் அறிவதில்லை.

அவர்கள் கூறினார்கள்: அவன் வேறு இறைவனாக இருக்கின்றான். ஆனால் வேறு எந்த இறைவனும் இல்லை. ஆன்மாவிலும் அந்த புதிய தோற்றம் புதிய ரீதியில் அவனை வெளிப்படுத்தும். அப்போது அந்த புதிய வெளிப்பாட்டின் மேன்மையில் அவன் மாறிய மனிதனுக்காக வேலை செய்கின்றான். அவ்வாறு பிறருக்காக அவன் செய்வதில்லை. இதுவே வழக்கத்திற்கு மாற்றமான அவனது நடைமுறை ஆகும். (லெக்சர் ஸியாலகோட். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 222-223)

தொழுகை, துஆ மற்றும் நற்செயல்களின் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத் மக்கள் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். மேலும் பைஅத் செய்த பிறகும் ஒருவரது வாழ்வு பைஅத் செய்வதற்கு முன்பு இருந்ததைப் போன்று அசுத்தமானதாக இருக்கும் என்றால் அவர் நம்முடைய ஜமாஅத்தில் இருந்து கொண்டு தீய நடத்தையை வெளிப்படுத்துகின்றார் என்றால், செயல் மற்றும் கொள்கை அடிப்படையில் குறைபாட்டை வெளிப்படுத்துகின்றார் என்றால் அவர் அநியாயக்காரர் ஆவார். அவர் முழு ஜமாஅத்திற்கும் அவப்பெயரை பெற்றுத் தருகிறார். நம்மையும் ஆட்சேபனைகளுக்கு ஆளாக்குகின்றார். தீய முன்மாதிரியில் மக்களுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. மேலும் நல்ல முன்மாதிரியால் மக்களுக்கு ஈர்ப்பு ஏற்படுகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதனது நேற்றும் இன்றும் சரிசமமாக இருக்கக் கூடாது. அதற்கான உதாரணத்தை கூறியிருந்தேன். நன்மையில் நேற்றும் இன்றும் ஒரே நிலையில் இருக்கின்றார் என்றால் அவர் இழப்பிற்கு உரியவராவார். இறைவன் மீது நம்பிக்கை கொண்ட மனிதன் அவன் மீதே முழு நம்பிக்கையையும் வைப்பான் என்றால் நிச்சயமாக வீணாக மாட்டான். மாறாக இந்த ஒருவருக்காக இலட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 137-138; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) உதாரணத்தின் மூலமாகவும் கூறினேன். அதாவது ஒரு வலியுல்லாஹ் கப்பலில் இருந்தார். அவருக்காக மற்றவர்களும் காப்பாற்றப்பட்டனர். இறைவன் இந்த அளவும் உணர்வு வைத்திருக்கின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நம்முடைய ஆயுதம் துஆ ஆகும். எனவே துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வாள் ஏந்துவார் என்று எங்கும் எழுதப்படவில்லை. மேலும் போரிடுவார் என்றும் எங்கும் எழுதப்படவில்லை. மாறாக மஸீஹின் மூச்சினால் எல்லா நிராகரிப்பவர்களும் கொல்லப்படுவார்கள். அதாவது அன்னாரின் துஆவின் மூலமாக பணிகளையும் செய்வார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் பெற விரும்பும் அனைத்து நோக்கங்களும் துஆவின் மூலமாகத்தான் நமக்கு கிடைக்கும். துஆவில் பெரும் வல்லமையுள்ளது.


அவர்கள் கூறுகின்றார்கள்: ஓர் அரசர் ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். வழியில் ஒரு ஏழை பக்கீர் அவரின் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து விட்டார். நீர் முன்னேறிச் செல்லக் கூடாது; அவ்வாறு சென்றால் நான் உம்முடன் போரிடுவேன் என்று அந்த பக்கீர் கூறினார். அதற்கு நீர் ஒன்றுமற்ற ஒரு பக்கீராக இருக்கின்றாய். நீர் எவ்வாறு என்னுடன் போரிட முடியும் என்று அரசர் கேட்டார். அதற்கு அந்த பக்கீர் நான் அதிகாலையின் துஆவின் ஆயுதத்தால் உம்மிடம் போரிடுவேன் என்று கூறினார். அதாவது, தஹஜ்ஜுத் தொழுகையின் துஆவுடன் நான் போரிடுவேன் என்று கூறினார். அதை எதிர்த்து என்னால் நிற்க முடியாது என்று கூறியவாறு அரசர் திரும்பிச் சென்று விட்டார்.

எனவே இறைவன் பெரும் வல்லமைகளை வைத்துள்ளான். இல்ஹாமின் மூலமாக இறைவன் மீண்டும் மீண்டும் என்னிடம் எது நடக்குமோ அது துஆவின் மூலமாகவே நடக்க முடியும் என்று கூறினான். நம்முடைய ஆயுதம் துஆ ஆகும். அதனை தவிர வேறெந்த ஆயுதமும் என்னிடம் இல்லை. எவற்றை நான் மறைமுகமாக

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

இறைவனிடம் கேட்கின்றேனோ அவற்றை அவன் வெளிப்படுத்துகின்றான். கடந்த நபிமார்களின் காலத்தில் சில எதிரிகளுக்கு நபிமார்கள் மூலமாகவும் தண்டனை வழங்கப்பட்டு வந்தது. அதாவது போரின் மூலமாகவும் வழங்கப்பட்டது. ஆனால் நாம் பலவீனமானர்கள் என இறைவன் அறிவான். ஆகவே நம்முடைய அனைத்து பணிகளையும் அவன் தனது கையில் எடுத்துள்ளான். இஸ்லாத்திற்கு இந்த ஒரு வழிதான் எஞ்சியுள்ளது. இதனை முல்லாக்களாலும், தத்துவஞானிகளாலும் புரிந்து கொள்ள முடியாது. மேலும் நமக்காக போர் ஆகுமானதாக இருந்தால் அதற்கான அனைத்து பொருள்களின் ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கும். நம்முடைய துஆக்கள் ஒரு மையத்தை அடையும் போது பொய்யர்கள் தாமாகவே அழிந்து விடுவார்கள். இது புரியத்தக்க கருத்தாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நம்முடைய துஆக்கள் ஒரு மையத்தை அடையும்போது அதாவது இறைவன் விரும்பும் தரத்தை அடையும் போது பின்னர் அனைத்து பொய்யர்களும் தாமாகவே அழிந்து விடுகின்றனர். அன்னாரது காலத்தில் எத்தனை எதிரிகள் இருந்தார்களோ அவர்கள் அனைவருமே அன்னாரின் முன்பு இழிவுதான் அடைந்தார்கள். இன்றும் இந்த துஆக்களின் மூலமாகத்தான் எதிரிகளை வெல்ல எண்ணினால் நாம் வென்று காட்ட முடியும். அதற்காக நாம் கடின முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நம்முடைய பார்வையில் துஆவை விட பெரிய ஆயுதம் ஒன்றும் மில்லை. இறைவன் தற்போது மார்க்கத்தை எந்த வழியில் வெற்றி பெறச் செய்ய விரும்புகின்றான் என்பதை புரிபவரே நற்பாக்கியம் பெற்றவராவார். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 27-28; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) ஆகவே அல்லாஹ் மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக எந்த ஆயுதத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கொடுத்துள்ளானோ அந்த ஆயுதத்தையே அன்னாரை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களும் பயன்படுத்த வேண்டும். இந்த ஆயுதமே நம்மை கஷ்டங்களிலிருந்து காப்பாற்றும். மேலும் எதிரிகளையும் இடம் தெரியாமல் அழித்து விடும். எனவே இதன் பக்கம் ஒவ்வோர் அஹ்மதிக்கும் கவனம் செலுத்துவது அவசியமாகும். இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முஸ்லிம் உம்மத்திற்காகவும் நமது ஜமாஅத்தைச் சாராத மற்ற முஸ்லிம் சகோதரர்களுக்காக பொதுவாகவும் செய்த ஒரு துஆ இதுவாகும்:

رَبِّ يَارَبِّ اِسْمَعْ دُعَائِيْ فِيْ قَوْمِيْ وَتَضَرُّعِيْ فِيْ اِخْوَتِيْ اِنِّيْ اَتَوَسَّلُ اِلَيْكَ بِنَبِيِّكَ خَاتَمِ النَّبِيِّيْنَ وَشَفِيْعِ وَمُشَفَّعٍ لِلْمُذْنِبِيْنَ۔ رَبِّ اَخْرِجْهُمْ مِنَ الظُّلُمَاتِ اِلٰى نُوْرِكَ۔ وَمِنْ بَيْدَاءِ الْبُعْدِ اِلٰى حُضُوْرِكَ۔ رَبِّ ارْحَمْ عَلَى الَّذِيْنَ يَلْعَنُوْنَ عَلَيَّ وَاحْفَظْ مِنْ تَبِّكَ قَوْمًا يَقْطَعُوْنَ يَدَيَّ وَاَدْخِلْ هُدَاكَ فِيْ جَذْرِ قُلُوْبِهِمْ وَاعْفُ عَنْ خَطِيْئَاتِهِمْ وَذُنُوْبِهِمْ وَاغْفِرْلَهُمْ وَعَافِهِمْ وَوَادِعْهُمْ وَصَافِهِمْ وَاَعْطِهِمْ عُيُوْنًا يُبْصِرُوْنَ بِهَا وَاٰذَانًا يَسْمَعُوْنَ بِهَا وَقُلُوْبًا يَفْقَهُوْنَ بِهَا وَاَنْوَارًا يَعْرِفُوْنَ بِهَا وَارْحَمْ عَلَيْهِمْ۔ وَاعْفُ عَمَّا يَقُوْلُوْنَ فَاِنَّهُمْ قَوْمٌ لَا يَعْلَمُوْنَ۔ رَبِّ بِوَجْهِ الْمُصْطَفٰى وَدَرَجَتِهِ الْعُلْيَا وَالْقَائِمِيْنَ فِيْ اٰنَاءِ اللَّيْلِ وَالْغَازِيْنَ فِيْ ضَوْءِ الضُّحٰى وَرِكَابٍ لَكَ تُعَدُّ لِلسُّرٰى وَرِحَالٍ تُشَدُّ اِلٰى اُمِّ الْقُرٰى۔ اَصْلِحْ بَيْنَنَا وَبَيْنَ اِخْوَانِنَا۔ وَافْتَحْ اَبْصَارَهُمْ وَنَوِّرْ قُلُوْبَهُمْ وَفَهِّمْهُمْ مَا فَهَّمْتَنِيْ وَعَلِّمْهُمْ طُرُقَ التَّقْوٰى۔ وَاعْفُ عَمَّا مَضٰى۔ وَاٰخِرُ دَعْوَانَا اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ السَّمٰوٰتِ الْعُلٰى

என்னுடைய இறைவா! என்னுடைய சமுதாயத்திற்காக என்னுடைய துஆவையும் என்னுடைய சகோதரர்களுக்காக என்னுடைய மன்றாடலையும் நீ கேட்பாயாக. நான் உன்னுடைய நபி காத்தமுன்னபிய்யீன் பாவம் செய்தவர் –களுக்காக ஏற்றுக் கொள்ளத்தக்க பரிந்துரை செய்யக் கூடிய அந்த நபிக்காக நான் உன்னிடம் வேண்டிக் கொள்வது என்னவென்றால் எங்களை இருளிலிருந்து உன்னுடைய ஒளியின் பக்கம் கொண்டு வருவாயாக. தூரத்திலிருந்து உனது அருகில் கொண்டு வருவாயாக. என்னுடைய இறைவா! என் மீது சாபம் இடுபவர்கள் மீது அநீதியிழைப்பவர் மீது நீ கருணை காட்டுவாயாக. இந்த சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்று –வாயாக. இவர்களது உள்ளத்தில் உனது வழிகாட்டுதலை இடுவாயாக. இவர்களுடைய குறைகளையும், பாவங்களையும் மன்னிப்பாயாக. இவர்களை மன்னித்து இவர்களுக்கு நல்வாழ்வை வழங்குவாயாக. இவர்களை சீர்திருத்துவாயாக. இவர்களை தூய்மைப்படுத்துவாயாக. இவர்களுக்கு பார்க்கும் கண்களை வழங்குவாயாக. கேட்கும் காதுகளை வழங்குவாயாக. இவர்களுக்கு புரியும் உள்ளத்தை வழங்குவாயாக. இவர்கள் புரியும் அளவிலான ஒளியை வழங்குவாயாக. இவர்கள் மீது கருணை காட்டுவாயாக. இவர்கள் கூறுபவற்றிலிருந்து இவர்களை மன்னிப்பாயாக. ஏனென்றால் இவர்கள் அறியாத சமுதாயத்தினர் ஆவர். என்னுடைய இறைவா! நபி (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து மீது சாட்சியாக இரவில் இறை வணக்கம் செய்தும், பகலில் போரிடுபவர்களின் மீது சாட்சியாக! இரவில் வேகமாக ஓடும் சவாரிகளின் மீது சாட்சியாக! நகரங்களின் தாயின் பக்கம் மேற்கொள்ளப்படும் பயணத்தின் மீது சாட்சியாக! நம்முடைய மற்றும் நம்முடைய சகோதரர்களுக்கிடையில் சமரச நிலையை ஏற்படுத்துவாயாக. அவர்களின் கண்களைத் திறப்பாயாக. அவர்களின் உள்ளங்களை ஒளிமயமாக ஆக்குவாயாக. நீ எங்களுக்கு வழங்கிய ஞானத்தை அவர்களுக்கும் வழங்குவாயாக. அவர்களுக்கு இறையச்சத்தின் வழிகளைக் காட்டுவாயாக. நடந்தவைகளை மன்னிப்பாயாக. என்னுடைய இறுதி துஆ இதுவாகும். உயர் வானங்களுக்கு இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 22-23)

அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தின் கண்களைத் திறப்பானாக. எதிர்ப்பிலிருந்து விலகி அல்லாஹ் அனுப்பியவரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உதவியாளர்களாக அவர்கள் ஆகட்டுமாக. அல்லாஹ் நம்மையும் துஆவின் உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவானாக. மாநாட்டில் கலந்திருக்கக் கூடியவர்கள் சிறப்பாக துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த மாநாட்டில் கலந்து கொள்வது அவர்களில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமையட்டுமாக. அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயில் கட்டடம் புதிதாக கட்டப்படுவதற்காக யூ.கே மற்றும் உலகம் முழுவதிலுமுள்ள வசதி படைத்த ஜமாஅத் சகோதரர்கள் பொருள் தியாகம் செய்யுமாறு அறிவிப்பு

**மூன்று வருட காலக்கட்டத்தில் எவ்வளவு தொகை வழங்குவதாக வாக்குறுதி கூறப்படுமோ அவற்றை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். ஆனால், குறைந்தபட்சம் நீங்கள் செய்துள்ள வாக்குறுதியில் மூன்றில் ஒரு பகுதியை முதல் வருடத்திலேயே கண்டிப்பாக செலுத்தி விட வேண்டும்.**

*ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 3 நவம்பர் 2017 –ல் ஜமாஅத் சகோதரர்களுக்கு ஒரு முக்கியமான பொருள் தியாகம் தொடர்பாக கவனமூட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:*

*“சுருக்கமாக நான் ஒரு திட்டத்தை அறிவிக்க விரும்புகின்றேன். அது யூ.கே –விற்கு பொதுவானதாக இருக்கின்றது. உலகிலுள்ள வசதி படைத்த தகுதியுள்ள ஜமாஅத் சகோதரர்களுக்காகவும் அது இருக்கின்றது. அத்திட்டம் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலின் எரிந்துபோன பகுதியை புதிதாகக் கட்டுவதாகும். இது மிகப்பெரிய திட்டமாகும்...... ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்கள் இந்த பள்ளிவாயிலைக் கட்டுவது பற்றிய திட்டத்தை அறிவித்தபோது ஆரம்பத்தில் ஐந்து மில்லியனை இதற்காக வழங்குமாறு அவர்கள் அறிவித்தார்கள். பிறகு மீண்டும் ஐந்து மில்லியனை வழங்குமாறு மீண்டும் அறிவிப்பு செய்ய வேண்டியது வந்தது. இதற்காக புதிதாக உருவாக்கப்பட்ட திட்டத்திற்காகவும் ஏறக்குறைய இதே அளவு செலவாகும். அது ஏறக்குறைய 11 மில்லியன் ஆகும். அதில் ஏறக்குறைய பாதித் தொகை நம்மிடம் இருக்கின்றது. இதற்காக ஏறக்குறைய இந்த பாதித் தொகைக்கும் கூடுதலாக தொகை தேவைப்படுகின்றது. இதற்காக எந்நிலையிலும் சகோதரர்கள் எப்போதும் செய்து வந்தது போன்றே பொருள் தியாகம் செய்ய வேண்டும்.”*

*ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறினார்கள்: “மன்னர் ஔரங்கசீபின் காலத்தில் அரசு பள்ளிவாயில் தீப்பற்றி எரிந்தபோது மக்கள் அரசரிடம் ஓடி வந்தனர். பள்ளிவாயிலில் தீப்பற்றி விட்டது என்று அவரிடம் கூறினர். இந்த செய்தியைக் கேட்ட அரசர் உடனடியாக ஸஜ்தாவில் வீழ்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினார். ஆட்சேபனை செய்பவர்கள் வியப்புடன் அரசரே! இது நன்றி தெரிவிப்பதற்கான தருணமா? என்று கேட்டனர். இறைவனின் வீடு தீப்பற்றி எரிகிறது. முஸ்லிம்களின் உள்ளங்களுக்கு கடுமையான துக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறினர். அப்போது அரசர் நான் நீண்ட காலமாக சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தேன். அதாவது, இவ்வளவு பெரிய மகத்தான பள்ளிவாயில் கட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கட்டடம் மூலமாக ஆயிரக்கணக்கான படைப்பினங்கள் பயனடைந்து வருகின்றனர். ஏதாவதோர் ஆலோசனை கூறப்பட்டு இந்த நன்மையான பணியில் எனது பங்கும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஆனால் நாலாபுறமும் நான் இதனை எந்த அளவு முழுமை பெற்றதாகவும் குறையற்றதாகவும் கண்டேன் என்றால் இப்பணியில் எனக்கு எவ்வாறு நற்கூலி கிடைக்கும் என்று சிறிதளவு கூட என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. எனவே, இன்று அல்லாஹ் எனக்காக நன்றி கூறுவதற்கான ஒரு வழியை ஏற்படுத்தியுள்ளான். அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான்.” (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 387; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)*

*எனவே, நான் ஏற்கனவே கூறியது போன்றே எவர்கள் முதலில் இந்த தியாகத்தில் பங்கு பெற முடியவில்லையோ அவர்கள் கண்டிப்பாக இதில் பங்கு பெற வேண்டும். நீங்கள் இதற்காக வாக்குறுதி அளிக்கின்ற தொகையை மூன்று வருட காலக்கட்டத்திற்குள் முழுமையாகக் கொடுத்து முடிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். ஆனால், குறைந்தபட்சம் நீங்கள் செய்துள்ள வாக்குறுதியில் மூன்றில் ஒரு பகுதியை முதல் வருடத்திலேயே கண்டிப்பாகச் செலுத்தி விட வேண்டும்.*

# ஜுமுஆ பேருரை

திருக்குர்ஆனில் பொருள் தியாகத்தின் பக்கம் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கவனமூட்டுமாறு பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِاَنْفُسِكُمْ – அதாவது (உங்கள்) செல்வத்திலிருந்து எதனை செலவு செய்வீர்களோ அது உங்களது சொந்த பயனுக்காகவே ஆகும். மேலும் அத்துடன் நம்பிக்கையாளரின் இந்த அடையாளத்தையும் கூறி விட்டான். அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே செலவு செய்கின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்: وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ – நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே அன்றி செலவு செய்வதில்லை. இந்த சிந்தனையுடன் தனது செல்வத்தை இறை வழியில் செலவு செய்பவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள்! மேலும் இன்று அல்லாஹ்வின் அருளால் முழு உலகிலும் அஹ்மதிகளைத் தவிர அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டு பொருள் தியாகம் செய்யும் சிந்தனையை வைத்திருப்பவர்கள் எவருமில்லை. ஒருவேளை அல்லாஹ்வின் திருப்தியைப் பெற செலவு செய்பவர்கள் அல்லது தனது சக்திக்கேற்ப செலவு செய்பவர்கள் உலகில் வேறு சிலரும் இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்த ஜமாஅத் அளவில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், ஏழைகளுக்கும் தேவை உடையவர்களுக்கும் உதவவும், மார்க்கத்தைப் பரப்பவும், இஸ்லாத்தின் உண்மையான வரைபடத்தை உலகிற்குக் காட்டவும் தங்கள் மீது சுமையை சுமத்தியவாறு பொருள் தியாகம் செய்கின்றது.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய சஹாபாக்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் செய்துள்ள பொருள் தியாகங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

தியாகங்களின் இந்த தொடர் அல்லாஹ்வின் கட்டளையின்படி உள்ளதாகும். மேலும் அல்லாஹ்வின் அருளால் இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இது காணக் கிடைக்கிறது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு நான் கூறியதைப் போன்று உலகில் வேறு எவருக்கும் வழங்காத அந்தஸ்தை வழங்கியுள்ளான். மேலும் இதற்கான எண்ணற்ற உதாரணங்களை நாம் ஒவ்வோர் ஆண்டும் பார்த்து வருகின்றோம். இன்று நமது மரபிற்கேற்ப ஜனவரியின் முதல் குத்பாவில் வக்ஃபே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பு வெளியிடப்படுகின்றது. எனவே இதன் அடிப்படையில் வக்ஃபே ஜதீதில் பொருள் தியாகம் செய்துள்ளவர்களின ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன்.

---

வக்ஃபே ஜதீதிற்காக பொருள் தியாகங்களில் பங்கு பெற்று ஜமாஅத் சகோதரர்களுடன் தொடர்புள்ள ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஜமாஅத் சகோதரர்களுக்கு பொருள் தியாகம் செய்வதிலுள்ள இன்பம் மற்றும் ஆர்வம், சந்தா செலுத்தியதன் அருளினால் அவர்களது துன்பங்கள் அகன்று பொருளாதாரத்தில் விரிவான நிலை ஏற்பட்டு அவர்களின் உள்ளத்திற்கு நிம்மதி வழங்கப்பட்டது. மேலும் அவர்களது பொருள்களிலும் உயிர்களிலும் அருள்கள் ஏற்பட்டது பற்றிய ஆன்மாவுக்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

---

வக்ஃபே ஜதீதின் 61 -வது பொருளாதார ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பு. கடந்த வருடம் (2017) உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் வக்ஃபே ஜதிது சந்தாவில் 88 இலட்சத்து 62 ஆயிரம் பவுண்டு பொருள் தியாகம் செய்துள்ளது. ஒட்டுமொத்த அளவில் பாகிஸ்தான் முதல் இடத்திலும், இங்கிலாந்து இரண்டாவது இடத்திலும், ஜெர்மனி மூன்றாவது இடத்திலும் இருக்கின்றது. சென்ற வருடம் வக்ஃபே ஜதீதில் 16 இலட்சத்தை விட அதிகமானோர் இணைந்துள்ளனர். புதிதாக இத்திட்டத்தில் இணைந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 68 ஆயிரம் ஆகும். பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் வக்ஃபே ஜதீது சந்தாவில் அதிகமாக தியாகங்கள் செய்துள்ள நாடுகள் மற்றும் ஜமாஅத்துகள் பற்றிய ஆய்வறிக்கையை ஹுஸூர் அவர்கள் படித்துக் காட்டினார்கள்.

அல்லாஹ் பொருள் தியாகம் செய்துள்ள அனைவரது பொருளிலும் உயிரிலும் பரக்கத்தை வழங்குவானாக. அவர்களின் ஈமான் மற்றும் நன்னடத்தையிலும் அவர்களை முன்னேறச் செய்வாயாக. மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் தமது சொல்லிலும் செயலிலும் அல்லாஹ்வின் திருப்தியின்படி செயலாற்றுபவர்களாக இருப்பார்களாக.

மதிப்பிற்குரிய வஜீஹ் முனவ்வர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான அன்பிற்குரிய அலி கவ்ஹர் முனவ்வர் அவர்கள் கார் விபத்தில் வஃபாத் ஆகி விட்டார். மர்ஹூமிற்காக ஜனாஸா ஹாஸிர் தொழுகை நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**5 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **5 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

திருக்குர்ஆனில் பொருள் தியாகத்தின் பக்கம் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கவனமூட்டுமாறு பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِاَنْفُسِكُمْ – அதாவது (உங்கள்) செல்வத்திலிருந்து எதனை செலவு செய்வீர்களோ அது உங்களது சொந்த பயனுக்காகவே ஆகும். மேலும் அத்துடன் நம்பிக்கையாளரின் இந்த அடையாளத்தையும் கூறி விட்டான். அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே செலவு செய்கின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்: وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ – நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே அன்றி செலவு செய்வதில்லை. இந்த சிந்தனையுடன் தனது செல்வத்தை இறை வழியில் செலவு செய்பவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள்!

மேலும் இன்று அல்லாஹ்வின் அருளால் முழு உலகிலும் அஹ்மதிகளைத் தவிர அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டு பொருள் தியாகம் செய்யும் சிந்தனையை வைத்திருப்பவர்கள் எவருமில்லை. ஒருவேளை அல்லாஹ்வின் திருப்தியைப் பெற செலவு செய்பவர்கள் அல்லது தனது சக்திக்கேற்ப செலவு செய்பவர்கள் உலகில் வேறு சிலரும் இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்த ஜமாஅத் அளவில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், ஏழைகளுக்கும் தேவை உடையவர்களுக்கும் உதவவும், மார்க்கத்தைப் பரப்பவும், இஸ்லாத்தின் உண்மையான வரைபடத்தை உலகிற்குக் காட்டவும் தங்கள் மீது சுமையை சுமத்தியவாறு பொருள் தியாகம் செய்கின்றது.

உண்மையில் இந்த அனைத்து செலவுகளும் அது ஏதேனும் மனிதனுக்கு உதவுவதாக

இருந்தாலும் சரி, அல்லது மார்க்கத்திற்காகக் செலவு செய்வதாயினும் சரி அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டேயாகும். அல்லாஹ்விற்கென்று எந்தப் பொருளின் தேவையும் கிடையாது. அவனுக்காக செலவு செய்தல் என்பதன் பொருள் என்னவென்றால், அவனது படைப்பினங்களின் மேன்மைக்காகவும் அவனது மார்க்கத்தின் மேன்மைக்காகவும் செலவு செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

அல்லாஹ் கூறியதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: இது ஹதீஸே குத்ஸி ஆகும். அல்லாஹ் கூறுகின்றான். ஆதமின் மகனே! நீ உனது கருவூலத்தை என் வசம் சேமித்து வைத்து நிம்மதியாக இருந்து கொள். (அதற்கு) நெருப்பு பற்றிக் கொள்வதற்கான அபாயமும் இல்லை. தண்ணீரில் மூழ்கி விடக்கூடிய அச்சமுமில்லை. எந்த திருடனும் திருடி விடுவான் என்ற அச்சமுமில்லை. மிகவும் அதிக தேவையுடையவனாக இருக்கும் அந்நாளில் என் வசம் வைக்கப்பட்டுள்ள கருவூலத்தை நான் உனக்கு முழுமையாக வழங்கி விடுவேன். (கன்ஸுல் உம்மால் தொகுதி 6 பக்கம் 352 ஹதீஸ் 16021)

எனவே, எதனை நாம் வெளிப்படையாக செலவாக நினைக்கின்றோமோ மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டு செலவு செய்கின்றோமோ, உண்மையில் செலவு அல்ல. அது எனது திருப்தியைப் பெறுவதற்காக எனது நெருக்கத்தைப் பெறும் நோக்கத்துடன் எதனை நீங்கள் செலவு செய்தீர்களோ அது உண்மையில் செலவு அல்ல. மாறாக அது உங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு விட்டது. மேலும் எப்போது நமக்கு அது தேவைப்படுமோ அப்போது அல்லாஹ் அதனை திருப்பி நமக்கு தந்து விடுவான் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இதேபோன்று ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கியாமத் நாளில் கேள்வி கணக்கு முடியும் வரை இறை வழியில் செலவு செய்பவர் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்த தனது செல்வத்தின் நிழலில் இருப்பார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 895 ஹதீஸ் 17466 முஸ்னது உக்பது இப்னு ஆமிர். பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் வெளியிடப்பட்டது) ஆனால் அத்துடன் அன்னார் ஒரிடத்தில் இந்த நிபந்தனையையும் விதித்துள்ளார்கள். அதாவது அல்லாஹ்வுக்கு அசுத்தமான பொருள் அதாவது தவறான வழியில் சம்பாதித்த பொருள் பிடிக்காது. மாறாக கடினமாக உழைத்து தூய வழியில் சம்பாதித்த பொருள் அவனது வழியில் செலவு செய்யப்பட்டால் அது ஏற்றுக் கொள்ளப்படும்.

எனவே இந்த விஷயத்தை நாம் எப்போதும் நமக்கு முன்னால் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது நமது செல்வம் எப்போதும் தூயதாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் எவ்வாறு முயற்சி செய்து உழைத்து அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே பெறும் பொருட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதேனும் பொருள் தியாகத் திட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்பதற்காக சம்பாதித்தார்கள்; சந்தா வழங்கினார்கள்; ஸதக்கா வழங்கினார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுத் தவ்ஹீது. பாபு கவ்லுல்லாஹுத் தஆலா தஹ்ருஜுல் மலாயிகா ஹதீஸ் 7430)

இது தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அபூ மன்சூர் அன்சாரி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்பொழுதெல்லாம் ஸதக்காக்கள் மற்றும் பொருள் தியாகம் செய்யுமாறு கூறுவார்களோ அப்போதெல்லாம் எங்களில் சிலர் கடை வீதிக்குச் சென்று அங்கு உழைத்து சம்பாதித்து, கூலியாக அது ஒரு முத் அளவு எவருக்கேனும் கிடைத்தாலும் சரியே. அவர் அதனை அந்த திட்டத்திற்காக செலவு செய்வர். முத் என்பது தானியத்தை அளக்கும் அல்லது நிறுக்கும் அளவுப் பாத்திரமாகும். ஒருவேளை ஒரு கிலோவுக்கும் குறைவாக எடையோ அல்லது அதற்கு நிகராகவோ இருக்கலாம். எவ்வாறிருப்பினும், அந்த சஹாபி கூறுகின்றார்: அந்த நேரத்தில் அவர்களின் நிலை இதுவாகும்: அவர்கள் பஜார் சென்று தியாகத்தில் சிறிது பங்கேற்பதற்காக உழைத்தார்கள்.

இப்போது அல்லாஹ் இவ்வுலகில் வழங்கி இருந்த அவர்களில் சிலரின் நிலை இவ்வாறு இருந்தது: ஒரு இலட்சம் திர்ஹம் அல்லது தினார் அவர்களில் ஒவ்வொருவரிடமும் இருந்தது. (சஹீஹ் புகாரி. கிதாபுஸ் ஸக்காத். பாபு இத்தக்குன்னார வலவ் பிஸிக்கி தம்ரதன் ஹதீஸ் 1416) ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தொடர்பாக ஒரு அறிவிப்பு வருகின்றது. அவர்கள் முஸ்லிமாகியபோது அவர்களிடம், வியாபாரம் மற்றும் சொத்து போன்றவை நீங்கலாக 40 ஆயிரம் அஷ்ரஃபி குவியலாக இருந்தது. அவர்கள் இவை அனைத்தையும் மார்க்கத்திற்காக செலவழித்து விடுவேன் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். மேலும் செலவழித்தும் வந்தார்கள். ஹிஜ்ரத்தின் வேளையில் அவர்களிடம் வெறும் 500 அஷ்ரஃபிகள் மட்டுமே அதில் எஞ்சியிருந்தது. (அத்திபுகாதுல் குபுரா லிஇப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 91 பாபு திக்ரி இஸ்லாமி அபூபக்ர்) இன்று கணக்கிட்டுப் பாருங்கள். அக்காலத்தின் அஷ்ரஃபிகள் அது தங்கத்தின் அஷ்ரஃபிகளாக இருந்தன. மதிப்பின்படி ஒருவேளை அது 11, 12 மில்லியன் பவுண்டு ஆகும். அது, நாம் வழங்கி வரும் வக்ஃபே ஜதீதின் முழு உலகத்தின் பட்ஜெட்டை விட அதிகமாகும்.

இதுதான் சஹாபாக்களின் நிலையாகும். எவர்களிடம் ஒன்றுமில்லையோ அவர்களும் உழைத்து அது சில Cent –களைக் கொடுத்திருந் –தாலும், சில ரூபாய்கள் கொடுத்திருந்தாலும் அதனை அவர்கள் கொடுக்க முயன்றார்கள். எவர்களிடம் இருந்ததோ அவர்கள் வறுமையைப் பொருட்படுத்துவதில்லை. அல்லாஹ்வின் வழியில் தயங்காமல் செலவு செய்தார்கள்.

பிறகு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களைப் பார்க்கின்றோம். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தியாகத்தின் சம்பவத்தைக் கேட்கின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறும்போதெல்லாம் அளவற்ற தியாகங்களை அவர்கள் செய்துள்ளார்கள். இதேபோன்று ஹஸ்ரத் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் இருந்தார்கள். அவர்கள் உம்மே நாஸிர் அவர்களின் தந்தையார் ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்தைப் பற்றி கேள்விப்பட்டபோது, இவ்வாறு பெரிய வாதத்தை செய்பவர் பொய்யராக இருக்க முடியாது என்று கூறினார்கள். உடனே பைஅத்தும் செய்து விட்டார்கள். பிறகு பொருள் தியாகத்திலும் முன்னிலை வகித்து வந்தார்கள். டாக்டர் தொழில் செய்து வந்தார்கள். அரசாங்க பணியாளராக இருந்தார்கள். செல்வந்தராக இருந்தார்கள். நல்ல வருமானமும் கிடைத்து வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவர்களை தமது 12 சீடர்களில் ஒருவராக எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இவர்களின் தியாகங்கள் எந்த அளவுக்கு முன்னேறியிருந்தது என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்களுக்கு இந்தப் பாராட்டை வழங்கினார்கள். அதாவது தாங்கள் ஜமாஅத்திற்காக எந்த அளவுக்கு பொருள் தியாகங்கள் செய்துள்ளீர்கள் என்றால் இனி நீங்கள் தியாகங்கள் செய்ய வேண்டிய தேவையே இல்லை.

எவ்வாறிருப்பினும், இவர்கள் தியாகங்கள் செய்து வந்தனர். ஆனால் பாராட்டு கிடைத்தவுடன் தியாகங்கள் செய்வதை விட்டு விட வில்லை. தியாகங்கள் செய்து கொண்டே சென்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குர்தாஸ்பூரில் வழக்கு நடந்து கொண்டிருந்தபோது அந்த சமயத்தில் நண்பர்களிடம் இந்த திட்டத்தை முன் வைத்தார்கள். அதாவது செலவுகள் அதிகரித்து வருகின்றன. வழக்குகளின் செலவுகள் உள்ளன. குறிப்பாக லங்கர் கானாவின் செலவுகள் அதிகரித்து விட்டன. ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு தங்கி இருந்ததன் காரணமாக குர்தாஸ்பூரிலும் லங்கர் நடந்து கொண்டிருந்தது. காதியானிலும் லங்கர் நடந்து கொண்டிருந்தது. இரு இடங்களிலும் லங்கர் தொடர்ந்து கொண்டிருந்தது. அதற்கான திட்டத்தை அன்னார் வைத்தார்கள். அதற்கு ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களுக்கு தற்செயலாக இந்த திட்டத்தைப் பற்றி கேள்விப்பட்ட அன்றுதான் சம்பளம் கிடைத்தது. அக்காலத்தில் 450 ரூபாயாக இருந்த தமது மொத்த சம்பளத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி விட்டார்கள். ஒரு பெரும் தொகையாக அது இருந்தது. இன்று அது இலட்சத்திற்கு நிகரானதாகும். அதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி விட்டார்கள். அவர்களின் ஒரு நண்பர், வீட்டின் தேவைக்காகவும் சிறிது வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கு அவர்கள், இறைவனின் மஸீஹ் மார்க்கத்திற்கு தேவை என்று கூறுகின்றார். பிறகு எதற்கு வைப்பேன்? மார்க்கத்திற்கு தேவை என்றால் அனைத்தும் மார்க்கத்திற்கே செலவு செய்யப்படும் என்று கூறினார்கள். (1926 -ல் நிகழ்த்தப்பட்ட ஆண்டு மாநாட்டு சொற்பொழிவுகள் அன்வாருல் உலூம் தொகுதி 9 பக்கம்403 )

இதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் அன்புடன் தமது சில ஏழையான அஹ்மதிகளைப் பற்றியும் கூறியுள்ளார்கள். அவர்களின் தியாகங்களைப் பற்றி கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் எனது ஜமாஅத்தின் அன்பு மற்றும் நன்னடத்தையின் மீது வியந்து போகின்றேன். அவர்களில் மிகவும் ஏழ்மையானவர்கள் மியான் ஜலாலுத்தீன், கைருத்தீன், இமாமுத்தீன் கஷ்மீரி போன்றோர் ஆவர். இவர்கள் எனது கிராமத்திற்கு அருகில் வசிக்கக் கூடியவர்களாவர். அவர்கள் மூவரும் ஏழ்மையான சகோதரர்களாவர். அன்றாடம் 3 அனா அல்லது 4 அனாவிற்கு கூலி வேலை செய்து வருகின்றனர். ஆனால் உத்வேகத்துடன் மாதாந்திர சந்தாவில் பங்கு பெற்றுள்ளனர். முறையாக சந்தா வழங்குகின்றனர்.

பிறகு அன்னார் கூறினார்கள்: அவர்களின் நண்பர் நிலத்தை அளப்பவரான மியான் அப்துல் அஸீஸ் அவர்களின் நன்னடத்தையின் மீதும் எனக்கு வியப்பாக இருக்கின்றது. சுய தேவை உடையவராக இருந்தும் ஒரு நாள், இது இறை வழியில் செலவு செய்யப்பட வேண்டும் என நான் விரும்புகின்றேன் என்று 100 ரூபாய் கொடுத்து விட்டுச் சென்றார்.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்த 100 ரூபாயை அந்த ஏழை பல ஆண்டுகளாக ஒன்றுதிரட்டி இருக்கலாம். ஆனால் அல்லாஹ்வின் மீதான உத்வேகம் இறை திருப்தியின் உணர்வைத் தூண்டி விட்டது. (அஞ்சாமே ஆத்தம். ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 313-314)

எனவே பொருள் தியாகத்தின் இந்தத் தொடர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் ஒன்றிரண்டு சம்பவங்களை நான் எடுத்துக் கூறினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களின் ஒன்றிரண்டு சம்பவங்களை எடுத்துக் கூறினேன். தியாகங்களின் இந்த தொடர் அல்லாஹ்வின் கட்டளையின்படி உள்ளதாகும். மேலும் அல்லாஹ்வின் அருளால் இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இது காணக் கிடைக்கிறது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு நான் கூறியதைப் போன்று உலகில் வேறு எவருக்கும் வழங்காத அந்தஸ்தை வழங்கியுள்ளான். மேலும் இதற்கான எண்ணற்ற உதாரணங்களை நாம் ஒவ்வோர் ஆண்டும் பார்த்து வருகின்றோம்.

இன்று நமது மரபிற்கேற்ப ஜனவரியின் முதல் குத்பாவில் வக்ஃபே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பு வெளியிடப்படுகின்றது. எனவே இதன் அடிப்படையில் வக்ஃபே ஜதீதில் பொருள் தியாகம் செய்துள்ளவர்களின ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன். அல்லாஹ் அவர்களின் தியாகங்களின் காரணமாக எவ்வாறு இவ்வுலகிலும் வழங்குகின்றான்? அது எவ்வாறு அவர்களின் ஈமானை உறுதிப்படுத்தும் காரணியாக அமைகின்றது? என்பதைப் பற்றி கூறுவேன். பொருள் தியாகத்தை மக்கள் ஆர்வத்துடன் செய்கின்றார்கள். மேலும் எவ்வாறு சஹாபாக்களின் முன்மாதிரியின்படி செயல்படுகின்றனர்? என்பது பற்றி நான் கூறினேன். சஹாபாக்கள் கடை வீதிக்குச் சென்று, சாதாரண கூலி கிடைத்தாலும் அதனை கொண்டு வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுத்து விடுவார்கள். இவ்வாறான முன்மாதிரி நமக்கு இன்றும் காணக் கிடைக்கின்றது.

ஃபுர்கினோஃபாஸோ அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: வித்கூ மண்டலத்தில் உள்ள காரீகி ஜமாஅத்திற்கு அருகில் அரசாங்கம் பைபர் ஆப்டிக் வயர்களை பூமியில் பதித்து வருகின்றது. அதற்காக ஜமாஅத்தின் இளைஞர்கள் ஒரு கிலோமீட்டருக்கான தோண்டும் வேலையைத் தருமாறு ஒப்பந்ததாரரிடம் கேட்டனர். இந்த வேலை கிடைத்தவுடன் ஜமாஅத்தின் இளைஞர்கள் இணைந்து தோண்டும் வேலையைச் செய்தனர். அதன் மூலமாக கிடைக்கக்கூடிய 1 மில்லியன் ஃபிராங்ஷிஃபா தொகையை அதாவது 1250 பவுண்டு தொகையை வக்ஃபே ஜதீது சந்தாவில் செலுத்தி விட்டார்கள். எனவே இது எப்படிப்பட்ட உணர்வு என்றால் நான் கூறியதைப்போன்று இது அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர எங்கும் காணப்படுவதில்லை.

அல்லாஹ் எவ்வாறு இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் ஈமானிலும் சந்தாவின் பரக்கத்தால் உறுதிப்பாட்டை வழங்குகின்றான் என்பதற்கான ஓர் உதாரணத்தைக் கூறுகின்றேன். ஃபுர்கினோ ஃபாஸோ மண்டலத்திலுள்ள ஜமாஅத்தின் ஓர் உறுப்பினர் தனது சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்: நான் ஒரு பயணத்தில் செல்ல வேண்டியிருந்தது. அப்போது வக்ஃபே ஜதீதின் ஆண்டு முடிவடைந்து கொண்டிருந்தது. மறுபுறம் பயிர் அறுவடையும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் செல்வதற்கு முன்பாக எனது பிள்ளைகளிடம், அறுவடை முடிந்ததும் அதிலிருந்து பத்து பாகத்தை எடுத்து சந்தாவில் கொடுத்து விடுங்கள் என்று கூறினேன். இதைக் கூறி விட்டு நான் பயணம் சென்று விட்டேன். பிறகு, பிள்ளைகள் அனைத்துப் பயிர்களையும் தானியங்களையும் வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். சந்தா செலுத்தவில்லை.

அவர் கூறுகின்றார்: திரும்ப நான் வந்து பார்த்து, விசாரித்தபோது பிள்ளைகள் அனைத்துப் பயிர்களையும் வீட்டில் வைத்து விட்டனர் என்பது தெரிய வந்தது. அப்போது நான் பிள்ளைகளிடம், இப்போதே அனைத்துப் பயிர்களையும் வீட்டை விட்டு வெளியே எடுத்து வைத்து அதிலிருந்து சந்தாவின் பாகத்தை தனியாகப் பிரியுங்கள் என்றேன். பிறகு பிள்ளைகள் அனைத்துப் பயிர்களையும் வெளியே எடுத்து வைத்து அதிலிருந்து சந்தாவின் பாகத்தை எடுத்து விட்டு பயிர்களை அதே இடத்தில் திருப்பி வைத்தனர்.

அவர் கூறுகின்றனர்: அதில் எந்தக் குறைவும் ஏற்படவில்லை. பிள்ளைகள் இதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்து விட்டனர். சந்தா பாகத்தை தனியாக விட்ட பிறகும் முதலில் இருந்த பயிர் அப்படியே இருந்தது.

இதன் பிறகு அவர் கூறுகின்றார்: நான் அவர்களிடம், அவனது வழியில் செலவு செய்வதால் செல்வம் குறைவதில்லை மாறாக அதிகரித்து விடுகின்றது என்பதை அல்லாஹ் உங்களுக்கு காண்பித்துள்ளான் என்று கூறினேன். இதுதான் ஆயிரம் மைல் தூரத்தில் இருப்பவர்களின் அந்த ஈமான் ஆகும். மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை, அவர்கள் ஏற்றுக் கொண்டனர்; நம்பிக்கை கொண்டனர். இஸ்லாத்தின் சரியான போதனையின்படி செயல்படுபவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

சந்தாவின் பரக்கத்தால் கஷ்டங்கள் நீங்குவது மற்றும் ஈமான் வலுப்பெறுவது தொடர்பான ஒரு சம்பவம் உள்ளது. ஐவரிகோஸ்டின் லிபிங்கோ ஜமாஅத்திற்கு தொடர்புடைய ஓர் அஹ்மதி நண்பர் யாகூப் சாஹிப் கூறுகின்றார்: நான் நீண்ட காலமாக அஹ்மதியாக இருக்கின்றேன். ஆனால், சந்தா அமைப்பில் பங்கேற்கவில்லை. முன்பு எனது வாழ்க்கையில் எப்போதும் பிரச்சனை இருந்து வந்தது. சில நேரம் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு இருந்து வந்தனர். சில நேரம் விவசாயம் தொடர்பாக சிக்கல் இருந்து வந்தது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக வக்ஃபே ஜதீது சந்தாவின் அருளுக்குரிய அமைப்பில் பங்கு பெற்று வருகின்றேன். மேலும் அல்லாஹ்வின் அருளால் பொருளாதார அமைப்பில் நிரந்தர அங்கமாக ஆன பிறகு அல்லாஹ் எனது வாழ்க்கையை மாற்றி விட்டான். இப்போது எனது குழந்தைகள் முன்பை விட அதிக உடல் நலத்துடன் இருக்கின்றனர்; தானியமும் அதிகமாக விளைகின்றது.

புதிதாக பைஅத் செய்துள்ளவர்களிலும் தியாகத்தின் ஆன்மா, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எவ்வாறு பிறக்கின்றது! ஐவரிகோஸ்டின் ஒரு நண்பர் ஸுப்லூல் சாஹிப் சில காலத்திற்கு முன்பு கிறித்தவத்திலிருந்து அஹ்மதிய்யத்தை ஏற்கும் வாய்ப்பைப் பெற்றார். தனது நகரத்தில் தனியாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டவர் ஆவார். மேலும் முறையாக எனது குத்பாக்களை கேட்டு வருகின்றார். அதிகமாக ஜமாஅத் நிகழ்ச்சிகளையும் கேட்டு வருகின்றார். மிகவும் நன்னடத்தை உடையவர். மிகவும் ஈமான் மற்றும் நன்னடத்தையில் அவர் முன்னேறியுள்ளார். பைஅத்திற்குப் பிறகு பிரெஞ்சு மொழியின் ஜமாஅத் பிரசுரங்களைப் படித்து வந்தார். இப்போது நல்ல தாயி இலல்லாஹ்வாக ஆகியுள்ளார். தப்லீக் செய்து வருகின்றார். இவர் தனது ஊரை விட்டு விட்டு நமது ஜமாஅத்தின் சென்டரின் அருகில் இஸ்லாத்தைப் பற்றி அதிகமாகக் கற்க வேண்டும் என்பதற்காக குடிபெயர்ந்து விட்டார். வேலை தேடி வந்தார். இவரது மனைவி கொஞ்சம் சம்பாதித்து வந்தார். அதன் மூலம் செலவு கழிந்து வந்தது. அவருக்கு சந்தா பற்றி கூறப்பட்டபோது இந்த கடினமான சூழல் இருந்தும் கூட 500 பிராங்ஷிஃபா தொகையை சந்தாவில் செலுத்தி விட்டார். இது எனது மற்றும் எனது குடும்பத்தாரின் சந்தாவாகும். நிலைமை சரியில்லை என்பது சரிதான். ஆனால் சந்தாவின் அருள்களிலிருந்து நான் பாக்கியமற்றவனாக இருக்க விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

சந்தா கொடுக்கக் கூடியவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து எவ்வாறு நிம்மதி கிடைக்கின்றது. இது தொடர்பாக ஐவரிகோஸ்டின் நமது முபல்லிக் எழுதுகின்றார்: ஐவரிகோஸ்டில் புந்தூக்கோ நகரம் இஸ்லாத்தின் தலைமையகமாகக் கருதப்படுகின்றது. மல்லவிகளில் பெரும்பான்மையானவர்கள் இங்கு இருக்கின்றனர். இங்கு தப்லீகின் கீழுள்ள ஒரு நண்பர் அப்துர் ரஹ்மான் சாஹிப் என்பவருக்கு ஜமாஅத்துடன் ஒரு பிரசுரம் மூலமாக அறிமுகம் ஏற்பட்டது.

அவர் கூறுகின்றார்: நாங்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு குடும்பத்தோடு கிறித்தவத்திலிருந்து முஸ்லிமாக மாறினோம். ஆனால் எனது உள்ளம் நிம்மதியடையாமல் இருந்தது. ஆனால் ஜமாஅத்தைப் பற்றி தெரிய வந்தபோது மிஷன் ஹவுஸ் சென்று சில கேள்விகளைக் கேட்டேன். எனக்கு எனது எல்லா கேள்விகளுக்குமான பதிலும் கிடைத்து விட்டது. நான் பைஅத் செய்து விட்டேன்.

அவர் கூறுகின்றார்: நான் பைஅத் செய்தது டிசம்பர் மாதமாக இருந்தது. முபல்லிக் சாஹிப் பள்ளியில் வக்ஃபே ஜதீது சந்தாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு சந்தாவில் இணையும்படி கூறினார். எனது சட்டைப் பையில் அப்போது 2 ஆயிரம் பிராங்ஷிஃபா இருந்து. அதிலிருந்து ஆயிரம் பிராங்ஷிஃபாவை வக்ஃபே ஜதீது பங்கில் அப்போதே கொடுத்து விட்டேன்.

அவர் கூறுகின்றார்: அல்ஹம்துலில்லாஹ்! அந்நாளிலிருந்து அல்லாஹ் எனது வாழ்க்கையையே மாற்றி விட்டான். அல்லாஹ் எனது வேலையில் பரக்கத்தை ஏற்படுத்தினான். நான் வேலை செய்யும் இடத்தில் அதிகாரி உட்பட அனைவரும் என்னை மதிக்கின்றனர். அளவான வருமானத்திலும் எந்த அளவிற்கு பரக்கத் ஏற்பட்டு விட்டது என்றால், மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கின்றேன். அவர் பைஅத் செய்த பிறகு முதல் நாளே சந்தா அமைப்பின் நிரந்தர தொடர்புடையவராக ஆகி விட்டார்.

தன்ஸானியாவிலுள்ள ஷிட்டெம்பா கிராமத்தின் ஒரு புதிய அஹ்மதியின் ஓர் உதாரணம் உள்ளது. ஜெய்னிபலோ சாஹிப் கூறுகின்றார்: நான் சந்தா கொடுப்பதில் மிகவும் கருமித்தனம் காட்டி வந்தேன். சந்தா கொடுப்பது தொடர்பாக எனக்கு நினைவூட்டப்படும்போது நான் ஏதாவதொரு சாக்குப்போக்கு கூறி விடுவேன். நான் நிலக்கரி தயார் செய்யும் வேலை செய்து வந்தேன். எனது பொருளாதார நிலையும் சரியாக இல்லை. இதனாலும் நான் சந்தா கொடுப்பதிலிருந்து தயக்கம் காட்டி வந்தேன். ஆனால் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதன் சிறப்பு புரிய வந்தது முதல் எனது வாழ்க்கையே மாறி விட்டது. நான் பயிரிட்ட போது அந்த வயலில், முன்பு எட்டு அல்லது பத்து மூட்டை கிடைத்து வந்தது. இப்போது அந்த வயலிலிருந்து அரிசி 56 மூட்டைகள் கிடைத்தன.

அவர் கூறுகின்றார்: இவை அனைத்தும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ததன் விளைவேயாகும். நான் சந்தா கொடுக்க ஆரம்பித்தது முதல் எனது வாழ்க்கையே மாறி விட்டது. எனது பொருளாதார நிலை நன்றாகி விட்டது. இப்போது நான் ஆறு அறைகளைக் கொண்ட ஒரு புதிய வீட்டைக் கட்டி வருகின்றேன். மேலும் பெரிய வீடு கட்டுவதன் காரணம் ஜமாஅத் விருந்தினர்கள் நமது கிராமத்திற்கு எப்போது வந்தாலும் அவர்கள் எனது வீட்டில் இருக்க வேண்டும். இதன் மூலம் எனக்கு விருந்தோம்பலுக்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகும். இப்போது தங்கும் வீட்டிற்காக செலவு செய்து வருகின்றார். இதிலும் அவர் இறை திருப்தியை முன்னிறுத்தியுள்ளார். ஏனென்றால், மார்க்கத்திற்காக செலவு செய்வதற்கு அவர் முன்னுரிமை அளித்து வருகிறார்.

மாலியின் முபல்லிக் எழுதுகின்றார்: ஒரு நாள் எங்கள் மிஷன் ஹவுஸில் ஒரு நண்பர் அப்துர் ரஹ்மான் சாஹிப் வந்தார். நான் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறினார். நீங்கள் ஏன் பைஅத் செய்ய விரும்புகின்றீர்கள் என அவரிடம் கேட்டபோது, அவர் கூறினார்: எனது பாட்டனார் ஒரு பெரிய மனிதராவார். அவர்கள் கூறினார்கள். இமாம் மஹ்தி வந்து விட்டார். அவருக்கான ஓர் அடையாளமாக இமாம் மஹ்தியைப் பின்பற்றுபவர்கள் இஸ்லாத்தைப் பரப்பும் பணியில் இமாம் மஹ்திக்கு பொருளுதவி செய்வார்கள் என்று கூறினார். நான் உங்களது ரேடியோவைக் கேட்டபோது, இமாம் மஹ்தி வந்து விட்டதாக அறிவிப்பு செய்யப்பட்டது. அத்துடன் கலீஃபத்துல் மஸீஹின் குத்பாவைக் கேட்டேன். அதில் பொருள் தியாகத்தின் சம்பவங்களைக் கூறுகின்றார்கள். பிறகு எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. எனது பாட்டனார் கூறிய அந்த இமாம் மஹ்தி இவர்தான். எனவே நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று கூறினார். இதன் பின் அவர் பைஅத்தும் செய்தார். மேலும் முறையாக சந்தாவும் கொடுக்கின்றார். பொருளாதார அமைப்பிலும் இணைந்துள்ளார்.

ஏழ்மையின் இறுதியில் இருக்கும் மக்களும் பொருள் தியாகம் செய்கின்றனர். பிறகு அல்லாஹ்வும் அவர்களுக்கு வியப்பான முறையில் வழங்குகின்றான். அவர்களின் ஈமானை உறுதிப்படுத்துகின்றான்.

கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: நேமினோ வெஸ்டில் குண்டா எனும் கிராமத்தில் வசித்து வரும் 49 வயதுடைய ஃபாத்திமா ஜாலூ சாஹிபா என்ற பெண்மணிக்கு வக்ஃபே ஜதீது சந்தா பற்றி எடுத்துக் கூறப்பட்ட போது அவர் கூறினார்: என்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறி விட்டு அவரது தோழி சில நாட்களுக்கு முன்பு கோழியை சந்தாவில் வழங்கினார்.

இதுவும் அதேபோன்ற ஓர் உதாரணமாகும். அதாவது ஒரு பெண்மணி காதியானில் கோழி முட்டை மற்றும் கோழியை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் வந்து அவற்றை அன்பளிப்பாக சந்தாவில் வழங்கினார். ஜமாஅத் அதனை ஏற்றுக் கொண்டால் வக்ஃபே ஜதீது சந்தா செலுத்துவதாகக் கூறினார்.

பிறகு அவர் அந்த கோழியையே சந்தாவாக கொடுத்து விட்டார். சந்தா செலுத்திய பிறகு கூறினார்: நான் எனது சிறிய தந்தை தொடர்பாக கூற வேண்டும். அவர் வீட்டின் குடும்பத்தைக் கவனிப்பவராவார். மிகவும் பிரச்சனையில் இருக்கின்றார். நான்கு மாதங்களுக்கு முன்பு அமைதியை குலைத்த குற்றச்சாட்டின் பேரில் செனிகலில் அவருக்கு ஏழு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அவர் சிறையில் உள்ளார். எவ்வாறிருப்பினும் அவருக்கு கூறப்பட்டது. எனக்கு அவர் துஆவிற்காக கடிதம் எழுதினார்.

அதன் பிறகு கூறுகிறார்: சந்தாவும் செலுத்தினேன். சந்தாவின் பரக்கத்தால் இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவரது சிறிய தந்தையை அரசு மன்னித்து விட்டதாக அவருக்கு தகவல் கிடைத்தது. அவர் சிறையிலிருந்து விடுதலையாகி விட்டார். அவரது விடுதலையைப் பற்றி கேள்விப்பட்டவர்கள் இது ஓர் அற்புதமேயாகும் என்று கூறினார். ஏனென்றால் இந்த குற்றத்திற்கு விடுதலை சாத்தியமேயில்லை. அந்த பெண்மணியின் சிறிய தந்தையான அல் அமீன் ஜாலூ சாஹிபிற்கு இந்த சம்பவத்தைப் பற்றி தெரிய வந்த போது, அவரது சகோதரி மகள் இவ்வாறு சந்தா செலுத்தினாள். துஆவிற்காக எனக்கு எழுதினார். பிறகு விடுதலையும் கிடைத்து விட்டது. இது அவருக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். இப்போது அல்லாஹ்வின் அருளால் தூய உணர்வுடன் தொடர்ச்சியாக சந்தா செலுத்தி வருகின்றார். தப்லீகும் செய்கின்றார். மேலும் சந்தாவின் பரக்கத்தின் விளைவாக அவரது சிறிய தந்தைக்கு விடுதலை கிடைத்தது என்று மக்களிடம் கூறி வந்தார். இதற்காக அவர் பெரும் கவலையில் இருந்தார்.

பிறகு ஆப்பிரிக்காவில் மட்டுமல்ல. இந்த முன்னேறிய நாடுகளிலும் அஹ்மதிகள் ஈமான் மற்றும் நன்னடத்தையை வெளிப்படுத்துகின்றனர். ஆஸ்திரேலியாவின் முபல்லிக் செய்யது வதூத் அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்: மெல்பெர்னில் ஒரு பெண்மணி பல்கலைக்கழகத்தில் இப்போது கல்வி பயின்று வருகிறார். அவர் வாக்குறுதிக்கு ஏற்ப தனது வக்ஃபே ஜதீது சந்தாவை செலுத்தி விட்டார். ஆனால் ஜுமுஆவில் பொருள் தியாகத்தைப் பற்றி மீண்டும் கவனமூட்டியபோது அந்த பெண்மணி மேலும் 50 டாலர் வாக்குறுதி கொடுத்தார். அடுத்த நாள் அதனையும் செலுத்தி விட்டார். இந்தப் பெண்மணி படிப்புடன் பகுதி நேர வேலையும் செய்து வந்தார். அவருக்கு ஒவ்வொரு 15 நாட்கள் கழித்து 530 டாலர்கள் கிடைத்து வந்தது. ஆனால் இந்த வாரம் அவருக்கு 1232 டாலர் கிடைத்ததாகக் கூறுகின்றார். அதனை அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இது அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ததன் விளைவால் மட்டுமே நடந்தது என்று கூறினார்.

பிறகு பிஜியின் அமீர் சாஹிப் நஸ்ர் வாங்கா ஜமாஅத்துடன் தொடர்புடைய ஓர் இளைஞர் தொடர்பாக எழுதுகின்றார்கள்: மிகவும் குறிப்பிடத்தக்கவர். பொருளாளராகவும் தொண்டாற்றி வருகின்றார். அவர் சந்தா செலுத்த தொடங்கியவுடன் அல்லாஹ் அவரது தொழிலில்

பெரும் பரக்கத்தை ஏற்படுத்தினான். அவரது மனைவி ஒரு கிறித்தவ குடும்பத்திலிருந்து வந்தவராக இருந்தார். அவர் கூறுகின்றார்: அனைத்தும் மார்க்க சேவை மற்றும் பொருள் தியாகத்தின் விளைவேயாகும். இல்லையென்றால் எங்களது கடன்கள் தீராதவையாகவே இருந்தன.

பிறகு பெனின் மண்டலத்தில் ஒரு பழைய ஜமாஅத் இருக்கின்றது. அங்குள்ள முஅல்லிம் ஹமீது சாஹிப் எழுதுகின்றார்: இங்குள்ள உள்ளூர்வாசிகள் பெருவாரியாக விவசாயம் செய்து வருகின்றனர். பஞ்சு உற்பத்தி செய்து வந்தனர். இந்த வருடம் வியாபாரிகள் பஞ்சுகளை சேமித்து கிராமத்தின் அருகே ஓரிடத்தில் ஆலைகளுக்கு அனுப்புவதற்காக ஒன்று கூட்டி வைத்திருந்தனர். ஆனால் ஒருநாள் திடீரென பஞ்சுக் குவியலின் மீது நெருப்பு பற்றிக் கொண்டது. கோடிக்கணக்கான ரூபாய்க்கான பஞ்சுகள் எரிந்து சாம்பலாகி விட்டது. அந்த வேளையில் ஒரேயொரு நபரின் பஞ்சு மட்டுமே தப்பியது. அது ஜமாஅத்தின் குறிப்பிடத்தக்க உறுப்பினர் உடையதாகும். மக்கள் உள்ளூர்வாசிகள் என்னிடம், அல்லாஹ் உங்கள் பஞ்சை மட்டும் காப்பாற்றியது ஓர் அற்புதமேயாகும் எனக் கூறினர். இதற்கு அந்த அஹ்மதி நண்பர், எனது நம்பிக்கை என்னவென்றால், அல்லாஹ் எனது செல்வத்தை, நான் அஹமதியாக இருக்கின்றேன். நான் ஒவ்வொரு மாதமும் சந்தா கொடுக்கின்றேன் என்பதனாலேயே காப்பாற்றினான் என்று கூறினார்.

கோங்கோ பிராஸ்வீல் முபல்லிக் எழுதுகின்றார்: மதாம் ஆயிஷா எனும் பெண்மணி அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் இருந்து வருகிறார். ஒருநாள் இவர் தனது மகனுடன் மிஷன் ஹவுஸ் வந்தார். மேலும் தனது கடுமையான பொருளாதார நெருக்கடியை வெளிப்படுத்தினார். கணவர் வீட்டுச் செலவுக்கு எதுவும் கொடுக்காமல் இருந்தது பொருளாதார நெருக்கடிக்கான காரணமாகும் என்பது மட்டுமின்றி, அரசு தரப்பிலிருந்து கடன் பெற்றிருந்ததால், மாதாமாதம் ஊதியமாக கிடைத்து வந்ததில், பிடித்தத்தின் காரணமாக பாதி சம்பளமே கிடைத்தது. கணவர் எதுவும் கொடுப்பதில்லை. மிகவும் கஷ்டத்தில் இருந்தார்.

இவர் கூறுகின்றார்: அவரது கஷ்டத்தைக் கேட்டு விட்டு கூறினார். முதலாவதாக எனக்கு கடிதம் எழுதுமாறு அவர் கூறினார். நீங்கள் துஆவிற்காக கடிதம் எழுதுங்கள். மேலும் சக்திக்கேற்ப சந்தாவை முறையாக செலுத்தி வாருங்கள் என்ற இந்த குறிப்பையும் அவர் வழங்கினார். அவர் கூறுகின்றார்: உடனடியாக கடிதம் எழுதினார். மேலும் சந்தாவை முறையாக செலுத்தத் தொடங்கி விட்டார். தனது குடும்பத்தினர் சார்பாகவும் சந்தா செலுத்தினார்.

அவர் கூறுகின்றார்: சில நாட்களே கழிந்திருக்கும். கணவர் தாமாகவே வீட்டின் வாடகை, குழந்தைகளின் பள்ளிக்கூட கட்டணத்தையும் செலுத்தத் தொடங்கி விட்டார். மறுபுறம் அவரது மர்ஹூம் தந்தையின் சொத்தை முழுவதுமாக தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்ட அவரது பெரிய சகோதரி முதன் முறையாக தனது சகோதரிக்கு ஒரு இலட்சம் பிராங்ஷிஃபா அனுப்பினார். இந்தப் பெண்மணி உடனடியாக மிஷன் ஹவுஸிற்கு போன் செய்து கூறினார். சந்தாவின் பரக்கதினால் எனது அனைத்து கஷ்டங்களும் நீங்கி விட்டன. நேரடியாக அவர் மிஷன் ஹவுஸிற்கு வந்து அந்தத் தொகையிலிருந்து அதிகப்படியாக 10 ஆயிரம் பிராங்ஷிஃபாவை சந்தாவாக வழங்கினார்.

கனடாவின் சத்ர் லஜ்னா எழுதுகின்றார்: பல்கலைக்கழகத்தில் பயிலும் ஒரு பிள்ளை என்னிடம் கூறியது. ஒருமுறை உள்ளூர் வக்ஃபே ஜதீது செயலர் என்னிடம் நீங்கள் வக்ஃபே ஜதீது சந்தா அவசியம் கொடுங்கள் என்று கூறினார். அல்லாஹ் இவ்வாறு உனது கஷ்டங்களை நிச்சயம் அகற்றி விடுவான். அந்த பிள்ளை கூறியது, என்னிடம் அப்போது 50 டாலர் இருந்தது. ஒரு மாணவி என்ற அடிப்படையில் அது எனக்கு ஒரு பெரும் தொகையாகவே இருந்தது. ஆனால் அதை வக்ஃபே ஜதீது சந்தாவில் கொடுத்து விட்டேன். இறை வழியில் இந்த தொகையைக் கொடுத்த சிறிது காலத்திற்குப் பிறகு எனக்கு பல்கலைக் கழகத்திலிருந்து 800 டாலர்கள் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. அல்லாஹ் எனது தியாகத்தை விட அதிகமாக வழங்கினான்.

எகிப்தின் நமது அஹ்மதியாக இருக்கும் அப்துர் ரஹ்மான் சாஹிப் கூறுகின்றார்: இவர் எழுதியபோது ஏறத்தாழ ஜூன் மாதமாக இருந்தது. கடந்த வெள்ளிக்கிழமை என்னிடம் 100 பவுண்டு இருந்தது. அதில் 50 பவுண்டை ஜமாஅத்திற்கு கொடுத்து விட்டேன். 50 பவுண்டை பயணச்செலவு மற்றும் இதர செலவினங்களுக்காக வைத்துக் கொண்டேன். எனது வீடு இந்த பகுதியிலிருந்து தூரமாக இருக்கின்றது. அங்கு இறைவனைத் தவிர வேறு யாரும் இல்லை. அடுத்த நாள் திடீரென தெரிய வந்தது. மாத சம்பளம் வழக்கமாக தாமதமாகவே வரும். இந்த முறை சீக்கிரமாகவே வந்து விட்டது. எனக்கு அந்த நாளே பெற வேண்டியதாக இருந்தது. நான் இரண்டு நாள் தாமதமாக பெற்றுக் கொள்ளச் சென்றேன். அங்கு என்ன பார்க்கின்றேன் என்றால், அரசாங்கள் சம்பளத்தை 60 சதவிகிதம் அதிகமாக்கி இருக்கிறது. இப்போது எனது எண்ணம் என்னவென்றால், அடுத்த வெள்ளிக்கிழமை இதன் பாதியையும் இறை வழியில் வழங்க வேண்டும் என்பதாகும். அல்லாஹ் தனது வழியில் செலவு செய்யும் வாய்ப்பை வழங்க துஆ செய்யுங்கள்.

பிறகு இந்தியாவைச் சார்ந்த நமது இன்ஸ்பெக்டர் சலீம் கான் எழுதுகின்றார்: குஜராத் மாநிலத்தின் ஸமராலா என்னும் ஜமாஅத்திற்கு சுற்றுப் பயணம் சென்றிருந்தேன். அங்குள்ள ஒரு நண்பருடன் போனில் தொடர்பு ஏற்பட்டது அவர் கூறினார்: நாங்கள் ஒரு மணி நேரத்தில் உங்களைச் சந்திக்க வருகின்றோம். ஒரு மணி


**திருக்குர்ஆனிலிருந்து...**

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக் -கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

நேரத்திற்குப் பிறகு சென்ற போது பேச்சு தொடர்ந்து கொண்டிருந்தது. அவர் கூறுகின்றார்: இரண்டு நபர்கள் வந்தார்கள். என்னிடம் பேசினர். பின்னர் அவரது ரெஃப்ரிஜிரேட்டரை எடுத்துக் கொண்டு சென்று விட்டனர்.

அவர் கூறுகின்றார்: இது என்ன என்று நான் அவரிடம் கேட்டேன். அவர் விஷயம் என்னவென்றால், நீங்கள் வருவதாகக் கூறினீர்கள். எங்களிடம் இன்று பணம் எதுவும் இல்லை. வீட்டில் Refrigerator இருந்தது. அதனை விலை பேசி விற்று விட்டேன். அவர் கூறுகின்றார்: நாங்கள் கூறினோம். ஏன் இவ்வளவு அவசரப்பட்டு விட்டீர்கள்? இப்போது இதனை திரும்ப வைத்துக் கொள்ளுங்கள். அவர் கூறினார்: இது நடக்காது. எங்களிடம் யாராவது தலைமையக பிரதிநிதி அல்லது தலைமையக பிரதிநிதி தரப்பிலிருந்து வந்து, நாங்கள் அவரை வெறுங் கையுடன் எவ்வாறு அனுப்புவது? ரெஃப்ரிஜிரேட்டர் என்ன? மீண்டும் வாங்கிக் கொள்ளலாம் – இன்ஷா அல்லாஹ் என்று அவர் கூறினார். அல்லாஹ் இவரது செல்வத்தில் பரக்கத் வழங்குவானாக. அவர் வாடகை வீட்டில் வசிக்கின்றார். மேஸ்திரி வேலை செய்து வருகின்றார். ஆனால் தனக்கு நெருக்கடி இருந்தும் கூட அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்வதிலிருந்து பின்வாங்கவில்லை.

இதேபோன்று இந்தியாவிலிருந்து வக்ஃபே ஜதீது இன்ஸ்பெக்டர் முனவ்வர் சாஹிப் எழுதுகின்றார்: உ.பி சுற்றுப் பயணத்தின் நடுவே சாந்தன் ஜமாஅத்தின் ஒரு நண்பரிடம் வக்ஃபே ஜதீது சந்தா வசூலிக்கச் சென்றோம். அவர் தனது கஷ்டங்களை வெளிப்படுத்தியவாறு, இப்போது நிலைமை சரியில்லை. நாளை காலை வாருங்கள். பிறகு பார்ப்போம் என்று கூறினார். அவர் கூறுகின்றார்: அடுத்த நாள் காலையில் அவரது வீட்டிற்குச் சென்றேன். அப்போது அவர், பணத்திற்கான ஏற்பாடு நடக்கவில்லை என்று கூறினார். அவரது மகள் (பாருங்கள்! குழந்தையிடம் எந்த அளவுக்கு தியாகத்திற்கான ஆன்மா உள்ளது.) அவரது சிறிய மகள் அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்தாள். குளிர் அதிகரிக்கின்றது. குளிரில் ஷூ வாங்கித் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தீர்கள். நீங்கள் எனக்கு ஷூ வாங்க வைத்துள்ள பணத்தை எனக்கு தாருங்கள் என்று குழந்தை அடம்பிடித்து தனது தந்தையிடமிருந்து பணத்தைப் பெற்று அனைத்தையும் வக்ஃபே ஜதீது சந்தாவில் கொடுத்து விட்டாள். மேலும் கூறினாள்: ஷூ பிறகு கூட வந்து கொண்டுதான் இருக்கும். முதலில் சந்தா பெற்றுக் கொள்ளுங்கள்.

நான் இவர்களிடம் கூறியும் உள்ளேன். ஒவ்வொரு வீட்டின் இப்படிப்பட்ட மக்களின் நிலையை கவனத்தில் கொள்ள வேண்டும். கொடுக்க முன் வந்தாலும் வாங்காதீர்கள் என்று கூறியுள்ளேன். மேலும் அடம்பிடித்து கொடுக்கின்றனர். ஆனால் ஜமாஅத் சில மக்களைப் பற்றி கவனத்திலும் கொள்ள வேண்டும்.

பிறகு இந்தியாவின் வக்ஃபே ஜதீது இன்ஸ்பெக்டர் ஃபரீது சாஹிப் கூறுகின்றார்: நவம்பர் மாதத்தில் உ.பி –யில் வக்ஃபே ஜதீது சந்தாவிற்காக சுற்றுப் பயணம் சென்றிருந்த போது மீரட்டிலும் ஒரு அஹ்மதி வீடு பல ஆண்டுகளாக ஜமாஅத்துடன் தொடர்பில்லாமல் இருப்பது தெரிய வந்தது. அவரது வீட்டிற்குச் சென்று அவருக்கு பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டப்பட்ட போது, அவர் கூறினார்: நாங்கள் வக்ஃபே ஜதீதில் மட்டுமல்ல. மாறாக அனைத்து சந்தாக்களிலும் பங்கு பெற விரும்புகின்றோம். இவ்வாறு அவர் விகிதாச்சாரப்படி வருமானச் சந்தா பட்ஜெட்டில் பெயரை சேர்த்துக் கொண்டார். அத்துடன் வக்ஃபே ஜதீது, தஹ்ரீகே ஜதீது, கிளை அமைப்புகளின் சந்தாக்களிலும் சேர்ந்து கொண்டார். அப்போதே 15 ஆயிரம் ரூபாயை வக்ஃபே ஜதீது சந்தாவாகக் கொடுத்து விட்டார். இவ்வாறு அல்லாஹ் வக்ஃபே ஜதீது திட்டத்தின் அருளால் ஒரு குடும்பத்திற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்பு நிலைபெற வைத்து விட்டான்.

எனவே, முன்பும் நான் பலமுறை கூறியுள்ளதைப் போன்று நமது தரப்பிலிருந்தும் நமது பணியாளர்கள் தரப்பிலிருந்தும் உள்ள சோம்பலேயாகும். அவர்கள் ஜமாஅத்துடன் தொடர்பு கொள்வதில்லை. சில சமயங்களில் ஒரு நீண்ட காலம் தொடர்பு கொள்ளப்படுவதில்லை. எனவே அனைத்து அமைப்பிற்கும் மக்கள் வரை சென்று சேரும் துடிப்பு இருக்க வேண்டும். இந்த ஒரு சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறியுள்ளேன். இவை மார்க்கத்திற்காக பொருள் தியாகம் செய்வது தொடர்பாக நமக்கு அறிவை வழங்குகின்ற அதே வேளையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் அஹ்மதிய்யான ஜமாஅத்தின் உண்மை மற்றும் இந்த ஜமாஅத் அல்லாஹ்வின் புறமிருந்து நிலைநாட்டப்பட்டுள்ளதற்கான ஒரு சான்றாக இருக்கின்றது.

நமது ஜமாஅத் ஈமான் மற்றும் உறுதியில் முன்னேறிக் கொண்டே இருக்க அல்லாஹ் செய்வானாக. அல்லாஹ்வின் திருப்தியைப் பெற தியாகங்களில் எப்போதும் முன்னேறிக் கொண்டே இருக்கட்டுமாக.

கடந்த வருடமும் கடந்த வருடத்தில் வக்ஃபே ஜதீதில் பொருள் தியாகம் செய்த ஜமாஅத்துகளின் தர வரிசைகள் தொடர்பாகவும் சிறிது கூறுவேன். அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதில் 60 –வது ஆண்டு 31 டிசம்பர் அன்று நிறைவடைந்தது. 1 ஜனவரி முதல் 61 –வது ஆண்டைத் தொடங்கி விட்டது. மேலும் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் 2017 –ல் வக்ஃபே ஜதீத் சந்தாவில் 88 இலட்சத்து 62 ஆயிரம் பவுண்டு தியாகம் செய்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 8 இலட்சத்து 42 ஆயிரம் பவுண்டு அதிகமாகும் – அல்ஹம்துலில்லாஹ்.

பாகிஸ்தான் மட்டுமின்றி அது முதலிடத்திலேயே உள்ளது. ஒட்டு மொத்த வசூல் அடிப்படையில் உலகில் மீதமுள்ள 10 நாடுகளின் தர வரிசை இதுவாகும்: பிரிட்டன் முதலிடத்தில் உள்ளது. ஜெர்மனி இரண்டாமிடத்தில் உள்ளது. தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் இது தலைகீழாக உள்ளது. அமெரிக்கா மூன்றாம் இடத்திலும், கனடா நான்காவது இடத்திலும், இந்தியா ஐந்தாவது இடத்திலும், ஆஸ்திரேலியா ஆறாவது இடத்திலும், மத்திய கிழக்கு நாடு ஒன்று ஏழாவது இடத்திலும், இந்தோனேஷியா எட்டாவது இடத்திலும், மத்திய கிழக்கு நாடு ஒன்று ஒன்பதாவது இடத்திலும், கானா பத்தாவது இடத்திலும் உள்ளது.

கானா இம்முறை போதிய அளவு முன்னேறியுள்ளது. உள்ளூர் பண மதிப்பு அடிப்படையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடும்படியான முன்னேற்றத்தில் பங்கேற்ற நாடுகளில் இந்த ஆண்டு கனடா பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இது போதிய முன்னேற்றம் பெற்றுள்ளது. இது மட்டுமின்றி ஆப்பிரிக்க நாடுகளில் நைஜீரியாவும் போதிய அளவு வளர்ச்சி அடைந்துள்ளது. 83 சதவிகிதம் அதிகரித்துள்ளது. மாலி 55 சதவிகிதம் அதிகரித்துள்ளது. சிரோலியோன் 45 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கேமரூன் 45 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கானா 24 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அதாவது கடந்த ஆண்டை விட அதிகம் வசூல் செய்துள்ளன.

அசல் விஷயம் என்னவென்றால், பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் சென்ற வருடம் வக்ஃபே ஜதீதில் 16 இலட்சத்தை விட அதிகமாக சந்தா கொடுப்பவர்கள் இணைந்துள்ளனர். புதிதாக இணைந்துள்ளவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 68 ஆயிரம் ஆகும். பங்கு பெற்றவர்களில் அதிகரித்தல் என்ற அடிப்படையில் முறையே நைஜீரியா முதல் இடத்தில் உள்ளது. பிறகு செராலியோன், நைஜர், பெனின், மாலி, கேமரூன், ஐவரிகாஸ்ட், செனிகால், ஃபுர்கினோபாஸோ, கேம்பியா, கேனிபஸாவு, கென்யா, தன்ஸானியா, ஜிம்பாப்வே உள்ளது. இவைகள் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளன.

St. Thomas Mount ஜமாஅத்தைச் சார்ந்த
ஜனாப் S.M. முஸ்.்.ப்பர் அஹ்மது சாஹிப்
அவர்களின் மகன் ஜனாப் ஸலீம் அஹ்மது
M.A.,M.L. (வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்)
அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளால்
19.10.2017 வியாழக்கிழமை அன்று பெண்
குழந்தை பிறந்துள்ளது - அல்ஹம்துலில்லாஹ்.
ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா
பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அந்தப்
பெண் குழந்தைக்கு *ரிதா ஸலீம்* எனப் பெயர்
வைத்துள்ளார்கள். அனைவரும்
துஆ செய்யவும்.

*குமரி மாவட்டத்தில்*
*இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்*
*பத்ர் வார இதழ் சம்பந்தமாக*
***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***
*1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)*
*இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.*
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

வயதிற்கு வந்தோருக்கான சந்தாவில் இதிலும் இரண்டு சந்தாக்கள் வயதிற்கு வந்தோருக்கு மற்றும் அத்ஃபாலுக்கு என உள்ளன. இதில் பாகிஸ்தான் மற்றும் கனடா அதிகமாக பணியாற்றியுள்ளன. ஆனால் இம்முறை ஆஸ்திரேலியாவும் அதிகமாக பணியாற்றியுள்ளது. பாகிஸ்தானில் வயதிற்கு வந்தோருக்கான பிரிவில் முதல் மூன்று இடத்தைப் பெற்றி ஜமாஅத்துகளில் முதலிடத்தில் லாஹூர் உள்ளது. இரண்டாவது இடத்தில் ரப்வாவும், மூன்றாவது இடத்தில் கராச்சியும் உள்ளது.

மாவட்டங்களின் தர வரிசையின் அடிப்படையில் ஜமாஅத்துகள்: 1) இஸ்லாமாபாத் 2) ராவல்பிண்டி 3) சர்கோதோ 4) குஜ்ராத் 5) உமர்கோட் 6) ஹைதராபாத் 7) மீர்பூர்காஸ் 8) டேரா காஸிகான் 9) கோட்லி ஆஸாத் காஷ்மீர் 10) கொயிட்டா.

பிறகு பாகிஸ்தானில் வசூலின் அடிப்படையில், முதல் பத்து இடங்களைப் பெற்றுள்ள ஜமாஅத்துகள்: 1) இஸ்லாமாபாத் நகரம் 2) டவுண்சிப் 3) குல்ஷின் இக்பால் கராச்சி 4) சம்ராபாத் லாஹூர் 5) ராவல்பிண்டி நகரம் 6) அஸீஸபாத் கராச்சி 7) டில்லிகேட் லாஹூர் 8) முகல்புரா லாஹூர் 9) ஸர்கோதா நகரம் 10) டேராகாஸிகான் நகரம்.

அத்ஃபாலின் மூன்று பெரிய ஜமாஅத்துகள்: 1) லாஹூர் 2) கராச்சி 3) ரப்வா.

மாவட்ட அளவில் முறையே 1) ஸர்கோதா 2) ராவல்பிண்டி 3) குஜ்ராத் 4) பைஸலாபாத் 5) ஹைதராபாத் 6) நாரோகன் 7) டேரா காஸிகான் 8) கோட்லி ஆஸாத் காஷ்மீர் 9) ஷேகுபூரா 10) மஸீரா ஆகியவை முறையே உள்ளன.

இங்கிலாந்தில் தர வரிசையில் முதல் பத்து இடம் பெற்ற பெரிய ஜமாஅத்துகள்: 1) வொர்ஸ்ட்டன் பார்க் 2) மஸ்ஜிது ஃபஸ்ல் 3) பெர்ம்ஹிங்கம் சவுத் 4) ஜில்லிங்கம் 5) பெர்ம்ஹிங்கம் வெஸ்ட் 6) நியூ மார்டன் 8) இஸ்லாமாபாத் 9) பட்னி 10) ஸேஸ். மண்டல அடிப்படையில் 1) இலண்டன் பி 2) மிட்லேண்ட்ஸ் 3) நார்த் ஈஸ்ட் 4) மிடில் செக்ஸ் 5) சவுத் இலண்டன் 6) இஸ்லாமாபாத் 7) ஈஸ்ட் இலண்டன் 8) நார்த் வெஸ்ட் 9) ஹார்ட்போர்ட் ஷெஹர் 10) ஸ்காட்லாண்டு.

அமெரிக்காவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: 1) ஸேலிசோன் வேலி 2) ஸிலாடோய் 3) டெட்ராய்டு 4) ஸில்லோஸ்பிரிங் 5) சென்ட்ரல் விர்ஜீனியா 6) போஸ்டன் 7) லாஸ் ஏஞ்சலஸ் ஈஸ்ட் 8) டெய்ஸஸ் 9) ரியுஸ்டன் நார்த் 10) ஓரல்.

வசூலின் அடிப்படையில் ஜெர்மனியின் முதல் ஐந்து உள்ளூர் அமாரத்துகள்: 1) ஹெம்பர்க் 2) ஃப்ராங்பர்ட் 3) பீரீஸ்க் பாதன் 4) கிராஸ்கிசா 5) மோர்ஃபெல்டன் வால்டோர்ஃப்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் ஜெர்மனியின் பத்து ஜமாஅத்துகள்: 1) நோயஸ் 2) ரோட்ரெக் மார்க் 3) மெஹ்தி ஆபாத் 4) நிடா 5) ஃபிரட் பர்க் 6) கேப்ளன்ஸ் 7) ஃபாயின்ஸயின் 8) வயின் கார்டன் 9) பின்னம்பர்க் 10) மோயெ ஃபிடன்.

வசூலின் அடிப்படையில் கனடாவின் அமாரத்துகள்: 1) பெய்கான் 2) கேல்கரி 3) பீஸ் வில்லேஜ் 4) பிரான்டன் 5) பிரான்கூவர் 6) நஸாகா.

கனடாவின் பத்து பெரிய ஜமாஅத்துகள்: 1) டர்ஹம் 2) அட்மின்டன் வெஸ்ட் 3) ஸிஸ்காட்டுன் சவுத் 4) வின்ஸர் 5) ரெட்போர்ட் 6) ஸிஸ்காட்டுன் நார்த் 7) மோன்ரியல் வெஸ்ட் 8) லைட் மினிஸ்டர் 9) அட்மின்டன் ஈஸ்ட் 10) எபிட் போர்ட்.

அத்ஃபால் பிரிவின் முதல் ஐந்து முன்மாதிரியான ஜமாஅத்துகள்: 1) டர்ஹம் 2) ரெட் போர்ட் 3) ஸிஸ்கார்டுன் சவுத் 4) ஸிஸ்கார்டுன் நார்த் 5) லைட் மினிஸ்டர்.

அத்ஃபால் பிரிவின் முதல் ஐந்து முன்மாதிரியான அமாரத்துகள்: 1) பீஸ் வில்லேஜ் 2) கேல்கரி 3) ஹர்ன் 4) பென்கூவர் 5) வெஸ்டன்.

இந்தியாவின் மாநிலங்களின் அடிப்படையில் முறையே 1) கேரளா 2) ஜம்மு காஷ்மீர் 3) தெலுங்கானா 4) கர்நாடகா 5) தமிழ்நாடு 6) ஒடிசா 7) மேற்கு வங்காளம் 8) பஞ்சாப் 9) உத்திர பிரதேசம் 10) மகாராஷ்டிரா ஆகியவை முன்னிலையில் இருக்கின்றன.

வசூலின் அடிப்படையில் தர வரிசையின்படி இந்திய ஜமாஅத்துகள்: 1) காலிகட் 2) ஹைதராபாத் 3) பத்தப்பிரியம் 4) காதியான் 5) கொல்கத்தா 6) பெங்களூர் 7) கண்ணூர் டவுண் 8) பைங்காடி 9) கருளாயி 10) கருநாகப்பள்ளி.

ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: 1) காஸல் ஹில் 2) பெஸ்பன் லோகான் 3) மாஸ்டரின் பார்க் 4) மெல்பர்லோங் ஹார்ன் 5) பெர்விக் 6) பெஸித் 7) பிளம்படன் 8) பிளேக் டவுண் 9) அடிலெய்டு சவுத் 10) கேம்ரா.

அத்ஃபால் பிரிவின் ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: 1) பிரிஸ்பன் லோசான் 2) பெஸித் 3) குஸ்பென் சவுத் 4) மெல்பர்ன் 5) பெர்விக் 6) அடிலெய்டு சவுத் 7) லாங்வாரன் 8) காஸன்ஹில் 9) மாஸ்டர்ன் பார்க் 10) மான்டிரைட்.

அல்லாஹ் பொருள் தியாகம் செய்துள்ள அனைவரது பொருளிலும் உயிரிலும் பரக்கத்தை வழங்குவானாக. அவர்களின் ஈமான் மற்றும் நன்னடத்தையிலும் அவர்களை முன்னேறச் செய்வாயாக. மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் தமது சொல்லிலும் செயலிலும் அல்லாஹ்வின் திருப்தியின்படி செயலாற்றுபவர்களாக இருப்பார்களாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா ஹாஸிர் தொழுகையை தொழ வைப்பேன். இந்த ஜனாஸா மதிப்பிற்குரிய வஜீஹ் முனவ்வர் சாஹிபுடைய மகனான அன்பிற்குரிய அலி கவ்ஹர் முனவ்வர் உடையதாகும். U.K –வின் அல்ரிஷர்ட்டைச் சார்ந்தவர். 23 டிசம்பர் 2017 அன்று தனது குடும்பத்துடன் ஜெர்மனி சென்று கொண்டிருக்கும்போது கோலன் ஷாஹரின் அருகே கார் டயர் வெடித்து விபத்துக்குள்ளானது. இவரது தாயார் காரை ஓட்டிச் சென்றார். 5 வயதில் இவரது மரணம் ஏற்பட்டு விட்டது. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அலி கவ்ஹர் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருந்தார். இவரது பாட்டனார் சவுதரி முன்னவ்வர் ஹஃபீஸ் சாஹிபின் தொடர்பு நாரோவாலுடன் இருந்தது. அவர் அலி என்னும் பெயரை தனது முப்பாட்டனாரின் பெயரான ஹஸ்ரத் அலி கோர் சாஹிபின் பெயரை வைத்தார். அவர் குடும்பத்தின் முதல் அஹ்மதியும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாகவும் இருந்தார்கள். அஸ்லம் அலி சாஹிபின் தாய் வழிப் பாட்டனார் கிழக்கு ஹைதராபாத்தைச் சார்ந்தவராவார். அலியின் தாயார் நுஸ்ரத் ஜஹான், நமது அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். நான் கூறியதைப் போன்று தாயாரான நுஸ்ரத் ஜஹான்தான் வண்டியை ஓட்டிச் சென்றார். நுஸ்ரத் ஜஹானின் தாயார் அதாவது, குழந்தையின் பாட்டி அமர்ந்திருந்தார். அவருக்கும் பெரிய அளவில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின்கீழ் இருக்கின்றனர். அல்லாஹ் அவருக்கும் உடல்நலம் மற்றும் ஆரோக்கியமான வாழ்வை வழங்குவானாக. மேலும், பெற்றோருக்கும் குழந்தையின் பெற்றோருக்கும் அல்லாஹ் நிதானத்தை வழங்குவானாக. அல்லாஹ்வின் அருளால் மிகவும் பொறுமையுடன் இந்த இழப்பை அவர்கள் பொறுத்துக் கொண்டனர். குறிப்பாக தாயார் சகித்துக் கொண்டார். குழந்தை அப்பாவியாகத்தான் இருக்கிறது. அல்லாஹ் குழந்தைகளை உடனடியாக சுவர்க்கத்திற்குக் கொண்டு சென்று விடுகின்றான். அல்லாஹ் பெற்றோருக்கும் பொறுமையையும் நிதானத்தையும் வழங்குவானாக. மேலும் அவர்கள் மீது கருணை புரிவானாக.

தொழுகைக்குப் பிறகு நான் கூறியதைப் போன்று ஜனாஸா தொழ வைப்பேன். இது ஹாஸிர் ஜனாஸா தொழுகை என்பதால் நான் வெளியே செல்வேன். ஜமாஅத்தினர் பள்ளிக்கு உள்ளேயே இருந்தவாறு ஜனாஸாவில் கலந்து கொள்ளவும்.

★ ★ ★ ★ ★

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.**
(16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்த்த(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 8 February 2018 Issue No. 6

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் கட்டளைகளின் ஒளியில் இன்று இறைவனின் இருப்பிற்கான உயிருள்ள ஆதாரம் இஸ்லாத்தில்தான் கிடைக்கின்றது என்று கூறினார்கள்.

எந்த மதமும் இத்தகைய அடையாளங்களைக் காட்டவில்லை. இந்தப் பழத்தை நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் தோட்டத்திலிருந்தே சாப்பிட்டோம் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகளைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு ஆதரவாக வெளிப்பட்ட அடையாளமான 'பிளேக்' பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆகியோரது உதாரணங்களை எடுத்துக் கூறியவாறு எவ்வாறு அல்லாஹ்வின் மகத்தான ஆதரவும் உதவியும் அவர்களுடன் இருந்தது என்பதைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அல்லாஹ் இந்த நபிமார்களுடன் எந்த அளவு மகத்தான முறையில் நடந்து கொண்டான் என்றால் அவர்கள் அல்லாஹ்வின் இருப்பிற்கான உயிருள்ள ஆதாரத்தை உலகின் முன்னால் எடுத்து வைத்தார்கள் என்று அன்னார் கூறினார்கள். இறுதியில் அவர்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் இந்த கட்டளையை எடுத்துக் கூறினார்கள்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நாம் இந்த உயிருள்ள இறைவனின் தூதுச் செய்தியை இந்தக் காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரைப் பின்பற்றியவாறு அதனை உலகிற்கு எட்ட வைக்கின்ற நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. உலகில் உள்ளவர்களுக்கு உயிருள்ள இறைவன் இருக்கின்றான் என்ற இந்த உணர்வை ஏற்படுத்து -பவர்களாக நாம் ஆவோமாக. அவன் இப்போதும் கேட்கக் கூடியவனாக இருக்கின்றான். அடையாளங்களையும் காட்டுகின்றான். அவன் பக்கம் திரும்புங்கள். அவன் பக்கம் வாருங்கள். நாம் சுயமே அந்த இறைவனுடன் உயிருள்ள தொடர்பை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருப்போமாக. அவனது போதனைகளுக்கு ஏற்ப செயல்படக் கூடியவர்களாக ஆவோமாக. அவனது இறை வணக்கத்திற்குரிய உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாக இருப்போமாக. அவனது பண்புகள் குறித்து சரியான அறிவை பெறக் கூடியவர்களாக நாம் இருப்போமாக. அவனது அருட்கொடைகளுக்கு வாரிசாவோமாக. நாமும் நமது வருங்கால தலைமுறையும் எப்போதும் அல்லாஹ்வுக்கு இணை வைப்பதிலிருந்து எல்லா வகையிலும் நம்மை பாதுகாத்துக் கொள்வோமாக.

இன்றைய அமர்வின் இரண்டாவது சொற்பொழிவின் தலைப்பு 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தல் என்பதன் ஒளியில்' என்பதாகும். இந்த சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கோரி சாஹிப் (நாஸிர் அஃலா, காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்கள் சூரா அல் அஹ்ஸாபின் 46 மற்றும் 47 -வது வசனங்களையும் சூரா அல் மாயிதாவின் 68 -வது வசனத்தையும் ஓதினார்கள். அதன் மொழியாக்கத்தையும் படித்துக் காட்டினார்கள்.

தனது சொற்பொழிவின் துவக்கத்தில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு முன்னதாக இருந்த காலம் தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். அந்தக் காலம் வழிகேடு மற்றும் இறைவனுக்கு இணைவைத்தல் ஆகியவற்றால் நிரம்பி இருந்தது. இந்த இருள் நிறைந்த காலத்தைப் பற்றி வேதனைப்படுகின்ற ஓர் உள்ளம் இருந்தது. அது, தமது சமுதாயத்தில் நிலவும் தீமைகளையும் வழிகேடுகளையும் பார்த்தவாறு வேதனைப்பட்டது. நிம்மதியிழந்த நிலையில் இறைவனது ஒளிக்காக துடித்துக் கொண்டிருந்தது. 25 வயது நிரம்பிய ஓர் இளைஞர் இந்த வேதனையில் மூழ்கியவாறு, நிம்மதியைத் தேடியவாறு மக்காவிலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற ஹிரா மலையை ஒட்டியிருந்த ஒரு குகையை தமது இறைவனை தனிமையில் வணங்குவதற்கான தங்கும் இடமாக ஆக்கிக் கொண்டார்கள். மேலும், தொடர்ச்சியாக 15 வருடங்கள் வரை பல நாட்களாக தனிமையிலேயே தமது இரவையும் பகலையும் அங்கு துஆக்கள் செய்வதில் கழித்து வந்தார். இவரே நமது எஜமானரும், கட்டுப்பட்டு நடப்பதற்குத் தகுதியுள்ளவரும், மனித குலத்தின் மீது பேரருள் புரிந்தவரும், அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாகத் தோன்றிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். இறுதியில், அல்லாஹ் அன்னாரது துஆக்களை ஏற்றுக் கொண்டான். மேலும், அந்த இறைவன் பரிசுத்த ஆவியான ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களை, ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய, அகப்பார்வையை வழங்கக்கூடிய தனது தூய வசனங்களுடன் அவர்களிடம் அனுப்பி வைத்தான்.

பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: "வானத்திலிருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் ஒளியைக் கொண்டு வந்தார்கள். அவர்களே ஓர் ஒளியாகவும் இருந்தார்கள். காட்டுமிராண்டிகள் வாழ்ந்த சமுதாயத்தில் அன்னார் பிறந்தார்கள் என்றாலும் அவர்களைக் குறை கூறுவதற்கு இடமே இல்லை."

இந்த வானத்து ஒளியின் மூலம் இருள்களில் வீழ்ந்து கிடப்பவர்களை ஒளிமயமாக்கி வழிகேட்டில் படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்ற மனித இனத்தை தூக்கி நிறுத்தி ஒளியின் மினாராவில் அவர்களை ஏற்றி விடுவதற்காக بَلِّغْ مَآ اُنْزِلَ اِلَیْکَ அதாவது முஹம்மது (ஸல்) அவர்களே! இப்போது இறங்குகின்ற ஒவ்வொரு திருக்குர்ஆன் வசனத்தையும் மக்கள் கேட்கும்படி நீர் செய்ய வேண்டும். அவற்றை எழுத வேண்டும். பிறகு அவற்றை மனனம் செய்ய வேண்டும். பிறகு திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளைக்கேற்பவும் செயலாற்ற வேண்டும். இறை கட்டளையை நடைமுறைப்படுத்த வேண்டும். وَاِنْ لَّمْ تَفْعَلْ فَمَا بَلَّغْتَ رِسَالَتَهٗ நீங்கள் இந்த புனித கடமையை நிறைவேற்ற முடியாமல் போனல் தூதுவத்திற்குரிய உரிமையை நீங்கள் செலுத்தவில்லை என்று இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினான்.

நாஸிர் சாஹிப் அஃலா அவர்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தப்லீக் அழைப்பு தொடர்பாக ஈமானை அதிகரிக்கச் செய்கின்ற பல சம்பவங்களை எடுத்துக் கூறினார்கள். அவற்றில் தாயிப் நகரத்தில் நடந்த சம்பவம் பற்றி அவர்கள் இவ்வாறு எடுத்துக் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் தப்லீக் அழைப்பு பற்றி எடுத்துக் கூறும்போது அவர்களது தாயிப் நகரப் பயணத்தை நாம் மறந்து விட முடியாது. பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து 40 மைல்களுக்கு அப்பால் உள்ள தாயிப் நகரத்திற்கு தன்னால் விடுவிக்கப்பட்ட அடிமையான ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களுடன் சென்றார்கள். அங்கு மற்ற தலைவர்களைத் தவிர ஸகீஃப் கோத்திரத்தின் மூன்று தலைவர்களும் கூட இருந்தனர். அவர்களுடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தாய் வழியில் உறவு இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள். மேலும் மக்கத்து குரைஷியர்களின் எதிர்ப்பைப் பற்றி அவர்களிடம் கூறி அவர்களிடம் உதவி கேட்டார்கள். அதைக் கேட்டு விட்டு அவர்களில் ஒரு தலைவர் 'இறைவன் உம்மை தூதராக ஆக்கி அனுப்பியுள்ளான் என்றால் அவன் கஅபாவிலுள்ள திரையைக் கிழித்துக் கொண்டிருக்கின்றான்' என்று கூறினார். இரண்டாவது தலைவர், 'உம்மை தவிர அல்லாஹ்வுக்கு அனுப்பி வைப்பதற்கு வேறு தூதர் கிடைக்க -வில்லையா?' என்று கேட்டார். மூன்றாவது தலைவர், 'நாம் உம்மிடம் பேசுவதைக் கூட விரும்பவில்லை' என்று கூறினார். (இப்னு ஹிஷாம்) மேலும், இந்த நகரத்தை விட்டு விரைவாக வெளியேறி விடு என்றும் அவர் கூறினார். அத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் சில அடிமைகளையும் வெறுமனே சுற்றித் திரிகின்ற இளைஞர்களையும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக ஏவி விட்டார். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை ஏசிப் பேசியதுடன் அவர்களை எள்ளி நகையாடினர். இந்த தருணத்தில் அங்கு ஒரு பெருங்கூட்டம் ஒன்று திரண்டது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் செல்லும் வழியில் இருபுறமும் நின்றவாறு பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி கற்களை வீசத் தொடங்கினர். ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்றவாறு அவர்கள் மீது எறியப்படுகின்ற கற்களிலிருந்து அவர்களை காப்பாற்றுகின்ற கேடயமாக செயல்பட்டார்கள். ஆனால், தன்னந்தனியாக இருக்கும் நிலையில் அவர்களால் எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களைக் காப்பாற்ற முடியும்? கற்களால் தாக்கப்பட்டதன் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களின் கால் விரல்களிலிருந்து இரத்தம் வழிந்தோட ஆரம்பித்தது. காலணிகள் இரத்தத்தால் நிரம்பி விட்டது. ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்களுக்கும் கடுமையான காயம் ஏற்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கத்து தலைவர்களான உத்பா, ஷேபா ஆகியோரின் திராட்சைத் தோட்டத்தில் அடைக்கலம் புகுந்த பிறகே இந்தக் கூட்டம் திரும்பிச் சென்றது.

*(தொடரும்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad